Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, OCTOBER 23, 2021

சனிக்கிழமை, 23 ஒக்டோபர் 2021 | ஒளி: 07 கதிர்: 134 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



# சைகை மொழி 2022 பட்ஜெட்

2022ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, நவம்பர் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கவுள்ளார். அதன் பின்னர், பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறும்.

அதனை, செவிப்புலனற்ற நபர்களுக்காக சைகை மொழியிலும் வழங்குவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்று (22) அனுமதியளித்துள்ளது.

வரவு- செலவுத்திட்டம் மீதான விவாதம், தொலைக்காட்சிகளில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது. அதன்போது, சைகை மொழி பயன்படுத்தப்படும்.

இவ்வாறான யோசனையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவே முன்வைத்தார். அதற்கே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவில் மீண்டும் பரவுகிறது கொரோனா



சீனாவில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவியுள்ளது. தொடர்ந்து ஐந்தாவது நாளாகவும் கொரோனா பரவுவதால், விமான நிலையங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் முழுமையாக மூடப்பட்டுள்ளன.

சீனாவின் வடக்கு, வடமேற்கு மாகாணங்களிலேயே கொரோனா வைரஸ் மீண்டும் வேகமாகப் பரவி வருகிறதென சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# கோட்டா அரசாங்கமும் மாபியாவும் நிர்வகிக்கின்றன


## முஜிபுர் ரஹ்மான் எம்.பி குற்றச்சாட்டு



இன்று நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் உள்ளதென தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், ஒன்று கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம்; மற்றொன்று வர்த்தக மாபியாக்களை நிர்வகிக்கும் அரசாங்கம் என்றார்.

கொழும்பில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# கறுப்பு பூஞ்சை மரணம் பதிவு

நாட்டில் முதற்றடவையாக கொவிட்-19 நிமோனியாவுடன் தொடர்புடைய கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளான ஒருவர் மரணமடைந்துள்ளார். இது எமது நாட்டில் கறுப்பு பூஞ்சை தொற்றால் ஏற்பட்ட முதலாவது மரணமாகும்.

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எல்பிட்டிய பகுதியை சேர்ந்த 56 வயதான ஒருவரே கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என கராப்பிட்டிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய விசேட நிபுணர் ரொஹான் பீ. ருவன்புர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இரண்டாம் கட்டத்தின் கீழ்

# மேலும் மூன்று பிரிவுகளை ஆரம்பிக்க ஆலோசனை

அனைத்து பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவு மற்றும் தரம் 11, 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கடல் வளங்களுக்கான போராட்டம் இந்தியாவுக்கு எதிரானதே அல்ல



## சுமந்திரன் எம்.பி சபையில் வலியுறுத்தல்

இலங்கை, இந்திய கூட்டறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளதைப் போல, இழுவை மடி தொழிலை உடனடியாக நிறுத்தவேண்டுமென மீண்டும் வலியுறுத்தியுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

தொடர்ச்சி P2



# உரப் பிரச்சினையால் சபையில் சலசலப்பு

சபைக்குகள் எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையால், நேற்று (22) சுமார் அரைமணி நேரத்துக்கு பெரும் சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

விவசாயிகள் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் உரம் தொடர்பிலான பிரச்சினைகளை முன்வைத்தே, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள், எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அவையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பலமுறை முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அம்முயற்சி கைகூடவில்லை.

தொடர்ச்சி P2



## பிரிந்து வாழ்ந்த கணவன், மனைவி

# ஒரே அறையில் சடலங்களாக மீட்பு

விவாகரத்துப் பெற்ற, கடந்த ஐந்து வருடங்களாகப் பிரிந்து வாழ்ந்த கணவனும் மனைவியும், ஒரே அறையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் காலி, ஊரகஸ்மங்ஹந்திய, கொரகீன பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

# யதார்த்தத்தை உணர்ந்து பொறுமையுடன் செயற்படுவோம்

## கரு தெரிவிப்பு: பூட்டானை உதாரணம் காட்டினார்



நாடு பேரழிவை எதிர்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்திலாவது யதார்த்தத்தை உணர்ந்து பொறுமை மற்றும் கட்டுப்பாட்டுடன் புத்திசாலித்தனமாக செயற்படுவோம் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நேற்று (நேற்றுமுன்தினம்) தீர்க்கப்படுமென முழு நாடும் நம்பியது. இப்போது அது மேலும் நீண்டு செல்வதாய் மாறியுள்ளது.

தொடர்ச்சி P2

# பிளவ வருட கொத்தணி கூடியது

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. இன்னும், 448 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முன்களப் பணியாளர்களுக்கு

# நவம்பர் 01 முதல் பூஸ்டர்

## பயணக்கட்டுப்பாடும் அன்று நீக்கம்

நாட்டில் தற்போது அமலிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படவுள்ளது என கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு

# பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை வைத்தியரை நியமிக்கவும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை



யாழ். போதனா வைத்தியசாலையில் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை வைத்தியர் ஒருவரை பணிக்கு அமர்த்துவதற்கு, அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் பாரிய தடையாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டிய அரச வைத்திய சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வாசன் இரட்ணசிங்கம், அந்த வெற்றிடம் இன்று வரை நிரப்பப்படவில்லை என்றார்.

தொடர்ச்சி P2



# கொழும்புக்குள் ரயில்கள் ஓடும்

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் ஒக்டோபர் 31ஆம் திகதி முதல் நீக்கப்படவுள்ள நிலையில், மாகாணங்களுக்கு உள்ளே ரயில் சேவைகளை ஒக்டோபர் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

"போக்குவரத்து அமைச்சால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது" என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார். இதற்கமைய, எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பு மாவட்டத்துக்குள் மாத்திரம் ரயில் சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். அத்துடன், ரயில் மாதாந்த பருவச்சீட்டினை வைத்திருக்கும் பயணிகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தட்டுப்பாடும் இல்லை; விலை அதிகரிப்பும் இல்லை

## எரிபொருள் அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை எனத் தெரிவித்துள்ள விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உதய கம்மன்பில, எரிபொருள் விலையை அதிகரிக்கும் எதிர்பார்ப்பும் இல்லையெனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சீனாவில் மீண்டும் பரவுகிறது கொரோனா

பாடசாலைகள், சுற்றுலா தலங்கள் விமான நிலையங்கள் என அனைத்தும் மூடப்பட்டுள்ளன. அத்துடன், நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஐந்தாவது நாளாக தொற்று அதிகமானோருக்கு பரவியதை அடுத்து பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

லான்சோ நகரில் இருந்து பிற மாகாணங்களுக்கு செல்ல விரும்புபவர்கள் கொரோனா நெகடிவ் சான்றிதழை கட்டாயம் காண்பிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

தொற்று பரவலை தடுக்க 40 லட்சம் பேர் வசிக்கும் லான்சோ நகரில் இருந்து மக்கள் தேவையில்லாமல் வெளியே வரவேண்டாமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜியான் மற்றும் லான்சோ இடையே 60 சதவீத விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிக அளவிலான பொதுமக்களிடம் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளவும், சுற்றுலாத் தலங்களை உடனடியாக மூடவும் மாகாண அரசுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கோட்டா அரசாங்கமும் மாபியாவும் நிர்வகிக்கின்றன

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இன்று நாட்டில் 122 ரூபாய்க்கு சீனி இல்லை. அரிசியின் கட்டுபாட்டு விலை நீக்கியதன் பின்னர், 165 ரூபாய்க்கு கீரி சம்பாவைத் தருகிறோம். 115 ரூபாய்க்கு நாடுவைத் தருகிறோம் என அரசாங்கத்தில் உள்ள வர்த்தகர்கள் கூறினார்கள்.

ஆனால் இன்று கீரி சம்பா 180 ரூபாயாகவும் நாடு 115 ரூபாயாகவும் சம்பா 150 ரூபாய்க்கும் சென்றுள்ளது. ஆகவே வர்த்தக மாபியாக்களான கறுப்பு சந்தை முதலாளிகளே இன்று அரசாங்கத்தை நிர்வாகம் செய்கின்றனர்.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஊடகங்கள் முன்பாக வந்து அரசாங்கத்தின் தீர்மானங்களை தெரிவித்தாலும் அதில் ஒன்று கூட நடக்காது.

தற்போது வர்த்தக மாபியாக்கள் அரசாங்கத்தின் பணியை செய்யும் அதேவேளை, அரசாங்கம் இந்த மாபியாக்கள் செய்வதைப் பார்த்துக்கொண்டு அமைதியாக எதுவுமே தெரியாத மாதிரி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் உள்ளது என்றார்.

இவ்வாறு இருப்பதற்கு நாட்டில் எதற்கு அரசாங்கம் என கேள்வி எழுப்பிய அவர், இந்த அரசாங்கமானது வர்த்தக மாபியாக்களுக்கு அடிமையாக வர்த்தக மாபியாக்கள் சொல்வதை செய்யும் அரசாங்கமாக மாறியுள்ளது என்றார்.

## ஒரே அறையில்...

கொரகீன பகுதியில் வசித்துவந்த 39 வயதுடைய ஆணொருவரும், 38 வயதுடைய பெண்ணொருவருமே அப்பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து இவ்வாறு சடலங்களாக நேற்றுமுன்தினம் (22)க மீட்கப்பட்டுள்ளனர்.

அந்த வீட்டின் அறையொன்றின் கட்டிலில் கையில் பூச்செண்டுடன் பெண்ணின் சடலமும் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் விவாகரத்துப் பெற்றவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# கறுப்பு பூஞ்சை மரணம் பதிவு

கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான பிரேத பரிசோதனையை மேற்கொண்ட உதவி சட்ட வைத்திய அதிகாரி தன்தெனிய ஆராய்ச்சி, மேலதிக பரிசோதனைக்காக உடற்பாகங்களை அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதற்கமைய, நேற்று முன்தினம் (21) வெளியிடப்பட்ட மேலதிக பரிசோதனை அறிக்கைக்கு அமைய, உயிரிழந்த நபரின் சுவாசப்பையை அண்மித்த பகுதியில் கறுப்பு பூஞ்சை தொற்றியிருந்ததாக, அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூஞ்சை நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பிரிமாலி ஜயசேகர உறுதி செய்துள்ளார்.

கொவிட்-19 நிமோனியாவுடன் தொடர்புடைய கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளானவர்கள் இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட போதிலும், இதனால் உயிரிழந்த முதலாவது நபராக குறித்த நபர் காணப்படுவதாக கராப்பிட்டிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய விசேட நிபுணர் ரோஹான் பீ. ருவன்புர தெரிவித்துள்ளார்.

## மேலும் மூன்று பிரிவுகளை ஆரம்பிக்கத் ஆலோசனை

கல்வி மற்றும் சுகாதார பிரிவினர் கலந்தாலோசித்து இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பிரத்தியேக வகுப்புகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றைத் தடுப்பதற்கான ஜனாதிபதி விசேட செயலணியுடன் காணொளி தொழில்நுட்பத்தினூடாக நேற்று (22) பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 200க்கும் அதிக மாணவர்களைக் கொண்ட அனைத்து ஆரம்ப பிரிவு பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளும் தயார் செய்யப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். முதலாம் கட்டத்தின் கீழ் 200 மாணவர்களுக்கும் குறைவானவர்கள் கற்கும் பாடசாலைகளின் கற்பித்தல் செயற்பாடுகள் நேற்று முன்தினம் (21) ஆரம்பிக்கப்பட்டன.

## கடல் வளங்களுக்கான போராட்டம் இந்தியாவுக்கு எதிரானதே அல்ல

கடல் வளங்களைப் பாதுகாப்பதற்காக தாங்கள் முன்னெடுத்த போராட்டம், இந்தியாவுக்கு எதிரானது அல்ல என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, ஆளும் கட்சியினால் கொண்டுவரப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றியகுழுவின் (கோப் குழு) அறிக்கைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கின் கடல் வளங்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம் குறித்து இரண்டு நாள்களுக்கு முன்னர் நாம் கடலில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தோம். இழுவை படகு மீன்படி மூலமாக கடல் படுக்கைகள் முழுமையாக அழிக்கப்படுகின்றது. கடல் வளங்கள், கற்பாறைகள் முழுமையாக அழிக்கப்படுகின்றன. இது அடுத்த பரம்பரைக்கு மீன் வளம் இல்லாது போகும் நிலைமை உருவாக்கிக்கொண்டுள்ளது.

இழுவை மடி தொழிலை உடனடியாக நிறுத்தவேண்டுமென தனியார் சட்டமூலம் ஒன்றை 2013 இல் கொண்டுவந்தேன், எனினும் நிறைவேற்ற முடியாது போய்விட்டது, பின்னர் 2016ஆம் ஆண்டில் தனியார் சட்டமூலம் ஒன்றினை முன்வைத்தேன், அதனை அரசாங்கத்தின் சட்டமாக கொண்டுவந்து நிறைவேற்றினர்.

அதன் பின்னர் இந்தியாவுடன் நாம் இது குறித்து பேசினோம். நானும் அந்த கூட்டங்களில் கலந்துகொண்டேன். இழுவை மீன்பிடி முறைமையை நிறுத்துவதாக இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. ஆனால் ஐந்து ஆண்டுகளின் பின்னர் இன்னும் அது தொடர்கின்றது.

இந்தியாவிற்கு எதிராக மீனவர் போராட்டம் நடத்தப்பட்டதாக பொய்யான பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இழுவை மடி தொழில் கூடிய விரைவில் நிறுத்தப்பட வேண்டுமென இருநாடுகளின் கூட்டறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் எந்த வேறுபாடும் கிடையாது.

அதேபோல் வடக்கு, கிழக்கில் மணல் அகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. கிழக்கில் இது தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டுள்ளதாக எமது உறுப்பினர் சாணக்கியன் சபையில் தெரிவித்திருந்தார், வடக்கிலும் இது இடம்பெறுகின்றது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இந்த மணல் அகழ்வு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நான் இரண்டு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். அப்போது எனது கண்களால் இதனை அவதானித்தேன். தனியார் நிலங்களில், உரிமையாளர்கள் இருக்கும் நிலையில் இந்த அகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. இதனை உரிமையாளர்கள் எதிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொலிஸில் முறையிட்டால் மணல் கொள்ளையாளர்களின் மூலமாக அச்சுறுத்தப்படுகின்றனர். பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்த மணல் கொள்ளை இடம்பெற்றுக்கொண்டுள்ளது என்றார்.

## பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை வைத்தியரை நியமிக்கவும்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாட்டு மக்களுக்கு சீரான, வினைத்திறனான, சமமான சுகாதார சேவை கிடைப்பதற்கு முன்னோடியாக செயற்பட்டுள்ளது என்றார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

முன்னோடியாக செயற்பட்டமையின் பயனாக, விசேட வைத்திய நிபுணர்கள், தர வைத்தியர்கள் எமது இடமாற்ற சபையில் முக்கிய பங்காளிகளாக இருந்து, வைத்தியர்களை தேவையான விதத்தில், தேவையான நேரத்தில் பணிக்கு அமர்த்தி, மக்களுக்கு சீரான சுகாதார சேவை கிடைப்பதற்கு செயற்பட்டு வருகின்றது என்றார்.

இந்த நிலையில், யாழ் போதனா வைத்தியசாலையில் இரண்டாவது பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை வைத்தியருக்கான வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் என புரிந்துகொண்ட பொது சேவை ஆணைக்குழுவுக்கு இதற்கான அனுமதியை பொது சேவை ஆணைக்குழுவும் வழங்கியிருந்தது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக சுகாதார அமைச்சு, யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளருடன் இணைந்து இந்தப் பதவி வெற்றிடத்தை உருவாக்க தவறி வருகின்றது.

இதனால், அங்கு 2 சத்திரசிகிச்சை நிபுணர்கள் கடமையில் இருக்கும் பட்சத்தில் நோயாளர்களுக்கு எவ்வித தடையுமின்றி சேவையாற்ற முடியுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின், யாழ் போதனா வைத்தியசாலையின் கிளையானது எமக்கு அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் கூடிய நிறைவேற்று குழு வடமாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அக்கடிதத்தின் பிரதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் 13 பேருக்கும், சுகாதார சேவை பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார்.

எனவே, உள்நோக்கம் கொண்டு வேண்டுமென்றே பதவி வெற்றிடத்தை நிரப்பாமல் பணிப்பாளர் காலம் தாழ்த்தி வருவாராயின், எதிர்வரும் காலங்களில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டி வருமென வைத்தியர் வாசன் இரட்ணசிங்கம் எச்சரிக்கை விடுத்தார்.

## பிளவ வருட கொத்தணி கூடியது

அந்த 448 பேரும், புதுவருட (பிளவ) கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் ஆவர். அதன்பிரகாரம், நாட்டில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 534,423 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து மேலும் 276 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (22) வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 502,740 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13,562 ஆக அதிகரித்துள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உரப் பிரச்சினையால்...

இதனால், சுமார் அரைமணி நேரம் கூச்சல் குழப்பத்துடன் சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

நேற்று (22) வெள்ளிக்கிழமை, சபாநாயகர் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்றம் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, மனுக்கள் சமர்ப்பணம் மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர், நேற்றைய தினப் பணிகளை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமானது.

இதன்போது, தங்களுடைய ஆசங்களிலிருந்து ஒரே நேரத்தில் எழுந்த, போது, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் கைகளில் பதாகைளை ஏந்தியவாறு, கோஷங்களையும் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியிருக்கும் இடையே கடும் வாக்குவாதங்களும் இடம்பெற்றன. இதனால் சபையில் அரை மணிநேரமாக கூச்சல் ,குழப்பம் ஏற்பட்டது. தத்தமது ஆசனங்களில் அமருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சபாநாயகர் அடிக்கடி கேட்டுக்கொண்டே இருந்தார். எனினும், சபாநாயகரின் அறிவித்தலையும் மீறி எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## யதார்த்தத்தை உணர்ந்து பொறுமையுடன் செயற்படுவோம்

அனைத்து தரப்பினரும் பொறுமையாக செயற்பட்டால் இரண்டு வருடங்களுக்குப் பிறகு குழந்தைகள் பள்ளிக்குச் சென்று, தமது குழந்தைப் பருவத்தை மீண்டும் பெற்றிருக்க முடியும். ஆனால் இது மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும்.

கடந்த காலங்களில் ஆசிரிய தொழிற்சங்கத்தினர், அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸார் பல்வேறு தொல்லைகள் மற்றும் அவமானங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. எனவே மனித உணர்வுகளை அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இப்போதாவது பழிவாங்கலைகளை நிறுத்தி அடுத்த திங்கட்கிழமையிலிருந்து ஆசிரியர்களின் ஆசிர்வாதத்துடன் பாடசாலைகளை ஆரம்பிக்கமாறு ஒரு நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கம், வேண்டுகோள் விடுக்கிறது என்றார்.

இரசாயன உரத்துக்குப் பதிலான சேதன பசளை பயன்பாடு நாட்டுக்கு மிகவும் முக்கியமானதென தெரிவித்துள்ள அவர், உலகில் எந்தவொரு நாட்டிலும் சில மாதங்களில் உரத்தில் மாற்றத்தை செய்ய அழுத்தம் விடுக்கப்படவில்லை. அப்படி செய்யவும் முடியாது. கொம்போஸ்ட் உரத்தைப் பயன்படுத்தி பாரியளவில் விவசாயத்தை ஆரம்பித்த பூட்டான் கூட அதன் பலனை அடைய 2030ஆம் ஆண்டு வரை காத்திருக்கின்றது என்றார்.

## தட்டுப்பாடும் இல்லை; விலை அதிகரிப்பும் இல்லை

இதனிடையே, லங்கா ஐ.ஓ.சி (IOC) நிறுவனம் நேற்று (21) நள்ளிரவு முதல் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை தொடர்பில் நேற்று (22) பிற்பகல் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன்போது, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

92 ரக பெட்ரோல் ஒரு லீற்றரின் விலையை 5 ரூபாவாலும், ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலையை 5 ரூபாவாலும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நேற்று முன்தினம் (21) நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது.


எவ்வாறாயினும், மற்றைய எரிபொருள்களின் விலைகளில் எந்தவொரு மாற்றமும் இடம்பெறவில்லை என ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நவம்பர் 01 முதல்...

இதேவேளை, எதிர்வரும் முதலாம் திகதி முதல் சுகாதார பிரிவு உள்ளிட்ட கொவிட் முன்களப் பணியாளர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (22) நடைபெற்ற செயலணி கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்களப் பணியாளர்களில் சுகாதாரப் பணியாளர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் சுற்றுலாத்துறையைச் சேர்ந்தவர்களுக்கே பூஸ்டர் செலுத்தப்படும்.



## இலங்கை-இந்திய நட்புறவை



# நீடித்த குஷிநகர்




ஆர். ராஜலிங்கம்

navaseelan24@gmail.com


கௌதம புத்தர் தனது எண்பதாவது அகவையில் படுத்த கோணத்தில் பரிநிர்வாணம் அடைந்த நகரம்தான் குஷிநகர். இந்நகர், இந்தியாவின் உத்திரப் பிரதேசம் மாநிலத்தில், குசிநகர் மாவட்டத்தில் உள்ளது. அந்நகரத்தில் சர்வதேச விமான நிலையமொன்று கடந்த 20ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

கொரோனா தொற்றுக்கு மத்தியில், இவ்வாறு சர்வதேச விமான நிலையமொன்று திறந்து வைத்திருப்பதன் ஊடாக, இந்திய அரசாங்கத்தின் பல்கோண சிந்தனைகள் புலனாகிறது. சுற்றுலாப்பயணிகளை வகைப்படுத்தலாம். அதில், வழிபாட்டுத் தலங்களுக்கு மட்டுமே சுற்றுலா பயணங்களை மேற்கொள்வோரை கண்டிருக்கின்றோம்.

பொதுவாக, ஓடோடி உழைத்து, உழைத்து தங்களின் இறுதிக்காலகட்டத்தில் ஏதாவது அனுபவித்துவிடவேண்டுமென நினைத்து, சுற்றுலாத்தளங்களுக்கு செல்லுவோர் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறானவர்கள் வழிபாட்டு தலங்களுக்கு சுற்றுலாச் சென்று, மனங்களுக்கு ஆறுதலைப் பெற்றுக்கொள்கின்றனர்.

கொரோனாவுக்கு பின்னர், பெரும்பாலான சுற்றுலா பயணங்கள் வழிபாட்டு தலங்களை மையமாகக் கொண்டிருக்கும். அதிலும், புத்தர் பரிநிர்வாணம் அடைந்த நகரத்தில் விமான நிலையமொன்று இருக்கையில், அங்கு நேரடியாக செல்லவிரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்தே இருக்கும்.



பௌத்த மதத்தை தழுவுகின்ற ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களும் குஷிநகரை நோக்கி படையெடுப்பர் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. இந்தத் தூரநோக்கான திட்டத்துக்காக இந்திய அரசாங்கத்தை புகழ்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கொரோனாவால், சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் வீழ்ச்சியடைந்துவிட்டது என சதாகாலமும் சிந்தித்துக் கொண்டிருக்காமல். வழிபாட்டுத் தலங்களுக்குச் சுற்றுலாச் செல்வதை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் செயற்பாடு அமைந்திருக்கிறது.

மத வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்வதற்கும் முதியோரை அனுப்பிவைப்பதற்கும் யாருக்குத்தான் ஆசையிருக்காது. அந்த ஆசையை நிறைவேற்றிக்கொடுப்பது மட்டுமன்றி, நேரடியாக விமானங்கள் தரையிறங்கினால், அதனூடான இதர வருமானங்கள் தொடர்பிலும் எழுந்த சிந்தனையை பாராட்டியாகவே வேண்டும்.

அவ்வாறான சிந்தனையால் அமைக்கப்பட்ட குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கடந்த 20ஆம் திகதியன்று திறந்துவைத்தார். அத்தரையில், இலங்கையில் இருந்து சென்றிருந்த விமானமே முதலாவதாக தரையிறங்கியது.

இதனூடாக, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதற்கான நட்பு பாலம் நீடிக்கப்பட்டுள்ளது. சுமார் 125 பௌத்த பிக்குகள் சகிதம் சென்ற அந்த விமானத்தில், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ, விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க, தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் , இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோரும் பயணித்திருந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக கலந்துகொண்டு விமான நிலைய திறப்பு விழாவில் அமைச்சர் நாமல் பேசுகையில், இலங்கைக்கு இந்தியா அளித்த பெரும் பரிசு புத்தமதம் என்றும் அது இலங்கைக்கு வந்ததிலிருந்து நம் இரு நாடுகளுக்கிடையேயான உறவு வளர்ந்து வருகிறது என்றும் கூறினார்.

விழாவைத் தொடர்ந்து, அவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பகவத் கீதை தொகுப்பை பிரதமர் மோடிக்கு பரிசளித்தார், அதில் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் செய்தியும் இருந்தது. இரு நாடுகளுக்கிடையேயான பாரம்பரிய உறவை வலுப்படுத்த இலங்கைக்கு 15 மில்லியன் டொலர் மானியம் வழங்கியமைக்கு பிரதமர் மோடிக்கு பிரதமர் மஹிந்த நன்றி தெரிவித்திருந்தார்.

கடந்த வருடம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற உச்சிமாநாட்டின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை ஏற்றே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இருதரப்பு சந்திப்பின் பின்னர், 2020ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் திகதியன்று குஷிநகர் விமான நிலையம் இந்திய அமைச்சரவையால் சர்வதேச விமான நிலையமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையிலிருந்து அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ தலைமையில் சென்ற இந்த தூதுக்குழுவில் சிரேஷ்ட பௌத்த பிக்குமார் 100 பேரும், இராஜாங்க அமைச்சர்களான டி.வி. சானக்க, ஜீவன் தொண்டமான், சிசிர ஜயக்கொடி, விஜித பெருகொட ஆகிய நான்கு பேரும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் குழுவில் இடம்பெற்ற பௌத்த பிக்குமார் இலங்கையின் 22 க்கும் மேற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பல்வேறு சமயப் பிரிவுகள் மற்றும் பௌத்த தேவாலயங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் மூத்த மற்றும் சிரேஷ்ட துறவி மதிப்புக்குரிய வேதாருவே உபாலி அநுநாயக்க தேரர் ஆவார்.

இந்தப் பயணமானது சுப தினமான வப் போயா தினமன்று கொழும்பிலிருந்து புனித குஷிநகருக்கு மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பயணத்தின் ஒரு முக்கிய நிகழ்வாக அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ, பிரதமர் மோடிக்கு பகவத்கீதை பிரதியைக் கையளித்தமை பார்க்கப்படுகிறது.

இந்திய பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் பல சந்தர்ப்பங்களில் உறுப்பினர்கள் ஏதேனும் பிரச்சினைகளுக்கு பகவத் கீதையை மேற்கோள்காட்டி பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அந்த அளவுக்கு பகவத்கீதை மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது.

இந்த யுகத்தின் ஆரம்பத்தில் அதாவது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மகாபாரத யுத்தத்தின்போது குருக்ஷேத்ரத்தில் வைத்து பகவான் கிருஷ்ணரால் அர்ச்சுணனுக்கு போதிக்கப்பட்டதே பகவத் கீதை. உண்மையில் பகவத்கீதை அர்ச்சுணன் மூலமாக உலகத்தினருக்குப் போதிக்கப்பட்டதாகும். தத்துவ, மத உரையாடல்களில் மிகச் சிறந்ததாகவும் திகழ்வது.

அத்தகைய சிறப்புக்குரிய பகவத்கீதையை அமைச்சர் நாமல், பிரதமர் மோடிக்கு வழங்கிய நிகழ்வு இந்திய மக்களுக்கே மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய விடயமாகும். கௌரவத்துக்குரியவர்களுக்கு வழங்கப்படும் பெரும் பரிசாகவும் பகவத்கீதை பார்க்கப்படுகிறது.

இதேவேளை பௌத்தம், ஒரு முக்கிய பாலமாகவும் அது இலங்கையையும் இந்தியாவையும் இணைப்பதாகவும் கருதப்படுகிறது. அத்துடன் இரு நாட்டு மக்களுக்கிடையிலான நாகரிக இணைப்பிலும் மையமாக உள்ளது.

இலங்கையில் புத்த மதம் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இளவரசர் மஹிந்தவின் வருகையுடன் தொடர்புடையது.

இவற்றை மனதில்கொண்டு கடந்த வருடம் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடனான சந்திப்பின்போது இருதரப்பு பௌத்த உறவுகளை மேலும் கட்டி எழுப்பும்வகையில் இந்தியப் பிரதமர் மோடி, 15 மில்லியன் அமெரிக்க டொலரை அறிவித்தார்.

உத்தரபிரதேச மாநிலமான குஷிநகர் அதன் வளமான பாரம்பரியம் காரணமாக புனித நகராக பிரகாசிக்கிறது. புத்த பகவான் தனது இறுதி மூச்சை எடுத்து, இந்த புனித நகரத்திலேயே மகாபரிநிர்வாணம் அடைந்தார்.

ஏனைய பௌத்த முக்கியத்துவம் வாய்ந்த சிராவஸ்தி, கபிலவஸ்து, லும்பினி ஆகிய தலங்களும் இதற்குத் தொலைவில் இல்லை. இத்தகைய சிறப்புகள் காரணமாக இந்த நகர் பல்வேறு நாட்டு மக்களையும் கவர்ந்துள்ளது.

கொவிட்-19 பிரச்சினைக்கு முன்னர் தாய்லாந்து, கம்போடியா, ஜப்பான், மியான்மார் எனப் பல நாடுகளிலிருந்தும் மக்கள் இந்த நகரிலுள்ள மஹாபரிநிர்வாண ஆலயத்துக்கு வருகை தந்து தினசரி வழிபாடுகளில் கலந்துகொண்டனர். எனவே, குஷிநகரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கும் கோரிக்கை நீண்டகாலமாகவே உள்ளது. இலங்கையிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் குஷிநகருக்கு ஏராளமான பயணிகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கொரோனாவிலும் தொடரும்

# Great Galle Project






மகேஸ்வரி விஜயனந்தன்

mayurisaai@gmail.com


நாடு கொரோனாவால் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்கு முகம்கடுத்து வந்தாலும் நெடுஞ்சாலைகள், கட்டுமாணப் பணிகள் என அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் மறுபுறம் இடம்பெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன.

இதற்கமைய, இலங்கையின் சுற்றுலாத் தளங்களில் முக்கியமானதும் பல உலக மரபுரிமைகளை தன்னகத்தே கொண்டுள்ளதுமான காலி மாவட்டத்தில், காலி நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் காலி மாவட்ட அலுவலகமும் இணைந்து முன்னெடுக்கும் அபிவிருத்தி பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக, அரசாங்கத் தகவல் திணைக்களம் கொழும்பிலிருந்து ஊடகவியலாளர்களை அழைத்துச் சென்றிருந்தது.

சுற்றுலாப் பயணிகளால் நிறைந்து காணப்படும் காலி கோட்டைப் பகுதியானது அன்றைய நாள் ஓரிருவருடன் வெறிச்சோடிக் காணப்பட்டாலும் காலி கோட்டையில் சில அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை காணக் கூடியதாக இருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து கொரோனா பேரழிவு என்பவற்றிலிருந்து மீள்வதற்கு எமது நாட்டுக்கு இருக்கும் ஒரே வழி சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதாகும் . அதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையானது உலக வங்கியின் நிதியுதவியின் கீழ், காலி நகரில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ என்ற கொள்கைக்கு அமைய நாட்டிலுள்ள பிரதான நகரங்களின் அபிவிருத்தியின் கீழ், காலி நகரின் அபிவிருத்தி (*Great Galle Project*) முன்னெடுக்கப்படுகின்றது.

காலி நகரை பிரதான நகராக தரமுயர்த்துவதற்காக காலி நகர மேம்பாட்டுத் திட்டமும் (*GGCDP*) அதன்கீழ் பல துணைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் ஆட்சியின் மத்திய நிலையமாக காணப்பட்ட காலி நகரைப் பாதுகாப்பதுடன் அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், புதிய முதலீட்டு கவர்ச்சியை மேம்படுத்தல், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல், காலி நகர சபை, போபே, போத்தல ஆகிய பிரதேசங்களில் ஒன்றிணைந்த அபிவிருத்தியை முன்னெடுத்தல் என்பன இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய, அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் 100 நகர அபிவிருத்தி திட்டங்கள் ஒரே நேரத்தில் காலி நகரில் செயற்படுத்தப்படுகின்றன. இதன் கீழ் காலி நகரை அலங்கரிக்க அரசாங்கம் 200 மில்லியன் ரூபாயை செலவிடுகிறது. இதன் விசேட அம்சம் யாதெனில் தொல்பொருள் தரத்தின் படி குறித்த கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் இதற்காக சீமெந்து பயன்படுத்தப்படாமை சிறப்பு அம்சமாகும். சீமெந்துக்கு பதிலாக ஒரு வகையான டைல் பவுடர் , சுண்ணாம்பு, செங்கல் என்பவை பயன்படுத்தப்படுகின்றன.

இத்திட்டங்கள் பற்றி கருத்து தெரிவித்த காலி நகரின் அபிவிருத்தி பணிகளை கண்காணிக்கும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தென் மாகாண பணிப்பாளர் அநுர மெதிவல, “காலி நகரில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் இந்த வருடம் நிறைவடையும்” என்றார்.

பத்தேகம பஸ்தரிப்பிட திட்டத்தின் வேலைகள் 90 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளன. காலி கோட்டை, தபாலகம், புதிய வாகனத் தரிப்பிடம், நவீன வர்த்தக தொகுதி என்பனவும் இந்த வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றார்.

அதேபோல் வெள்ள அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் காலி மாவட்டத்தில் 9 புதிய பாலங்களை அமைத்தல், காலி தர்பால பூங்காவை நவீனமயப்படுத்தல், உள்ளிட்ட திட்டங்கள் 2023ஆம் ஆண்டு 20 வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் என்றார்.


*The Star Bastion - Galle fort*

தற்போது கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள காலி கோட்டை- நட்சத்திர அரண்மனையாது, ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்டது. கடந்த காலத்தில் இதில் ஒரு பகுதி உடைந்து விழுந்துள்ளது.

ஒல்லாந்தர் யுகத்தின் மிகவும் பலமிக்கதாக சிறந்த பொறியியலாளர்களால் அமைக்கப்பட்ட நட்சத்திர கோட்டையின் ஒருபகுதி ஏன் உடைந்தது என முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளானது தொல்பொருள் ரீதியாக முன்னெடுக்கப்பட்டதுடன், காலநிலை உள்ளிட்ட மாற்றங்களே இது உடைந்து விழுந்தமைக்கு காரணம் என கண்டறியப்பட்டதுடன், அது மீண்டும் இடிந்து விழாமல் இருக்கும் வகையில் நவீன பொருள்கள் எதனையும் பயன்படுத்தாமல் இதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி கோட்டைப் பகுதியில் முன்னெடுக்கப்படும் Sky Walkway திட்டமானது காலி அபிவிருத்தி திட்டத்தின் உப திட்டம் என்றும் 3 பெக்கேஜுகளின் கீழ், காலி கோட்டையின் மதில் அபிவிருத்தி திட்டம் செயற்படுத்தப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தென்மாகாண பிரதி திட்ட பணிப்பாளர் தவிபதி தஹநாயக்க தெரிவித்தார்.

இதில் முதலாவது தொகுப்பின் கீழ், கோட்டைச் சுவர், அதன் 14 காவலரண்கள் மற்றும் பதுங்கு குழிகள், இதற்கு முன்னர் மக்களுக்கு பார்வையிட திறக்கப்படாத கண்காணிப்பு கோபுரங்கள் என்பவற்றை பார்க்கும் வாய்ப்பு பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது என்றார்.







இரண்டாம் கட்டத்தின் கீழ், அலங்காரப் பணிகளை முன்னெடுத்தல், காலி நகரிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தில் மின்னலங்காரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

மூன்றாவது தொகுப்பின் கீழ், 36 பீரங்கிகளை மீள அமைக்கப்படவுள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களை ஆராய்ந்து இந்த பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காலி கோட்டை பழைய தபாலகத்தின் அபிவிருத்தி பணிகள் தற்போது 50 சதவீதம் நிறைவடைந்துள்ளதுடன், இலங்கையின் முதலாவது தபாலகமான இதனை மக்கள் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காகவும், சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதி, அருங்காட்சியகம், புதிய தபாலகம் என்பவற்றை இதில் நிர்மாணிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போர்த்துக்கேயர் ஆளுநர் ஒருவரின் உத்தியோகப்பூர்வ இல்லமாக பயுன்படுத்தப்பட்ட இத் தபாலகம், 1974ஆம் ஆண்டு தொல்பொருள் அருங்காட்சியமாக பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை இராணுவத்தின் 6ஆவது பொறியியல் படையணி முன்னெடுத்து வருகின்றது.

வோலுவாகொட பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் தியதம் உயன வோலுவாகொட விவசாயச் சுற்றாடல் பூங்காவது, கிரேட் கோல் திட்டத்தின் மற்றுமொரு செயற்றிட்டமாகும். காலி நகரிலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்தில் 200 ஹெக்டயருக்கு அதிகமான வயல் பிரசேத்தில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

50 வருடத்துக்கு மேலாக நெல் உற்பத்தி செய்து, வெள்ள அச்சுறுத்தலால் கைவிடப்பட்டுள்ள இடத்திலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. சுபீட்சத்தின் நோக்கு என்ற தேசிய கொள்கையை செயற்படுத்தி விவசாய பூங்கா, விவசாய விற்பனை நிலையம், நடைபாதை, தேசிய விற்பனை நிலையம் என்பன இங்கு அமைக்கப்படவுள்ளதுடன், தாய்லாந்தில் உள்ள மிதக்கும் சந்தையை மய்யப்படுத்தி மிதக்கும் விவசாய உற்பத்திகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

# ‘ஊரோடினால் ஒத்தோடு’



‘ஊரோடினால் ஒத்தோடு’ எனும் கருத்திற்கிணங்க தடுப்பூசி போட்டுக் கொள்வதில் தாமதம் ஏற்படுத்தாமல் விரைவாக தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதால் கொரோனாத் தொற்றிலிருந்து மீள முடியும் என்பது, மடு சுகாதார வைத்திய அதிகாரியான டொக்டர் எஸ்.பி.லெம்பேட்டின் கருத்தாகும். இந்த வகையில், கொவிட்-19 தொடர்பான பல விழிப்புணர்வுகள் அரசாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வகையில் மடு சுகாதார வைத்திய அதிகாரியான வைத்தியர் எஸ்.பி.லெம்பேட் வழங்கிய செவ்வியின் முழு விவரம் பின்வருமாறு:



அனிதா ஐயங்கரன்
anithaiynkaran@gmail.com
ஊடகக் கற்கைகள் துறை, நான்காம் வருடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கேள்வி: கொரோனாத் தடுப்பூசிகளை மக்கள் முன்வந்து ஏற்றிக் கொள்கின்றனரா?**

ஆம், ஆரம்ப காலங்களில் மக்கள் மத்தியில் தடுப்பூசி தொடர்பான அச்சம் காணப்பட்ட போதிலும் தற்போதைய காலப் பகுதியில் அச்சமானது, தெளிவடைந்து தடுப்பூசியை மனமுவந்து போட்டுக் கொள்கின்றனர்.

**கேள்வி: சீனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட சினோபாரம், கொரோனாத் தடுப்பூசியினை பெரும்பாலான மக்கள் பயமின்றி ஏற்றிக் கொள்கின்றனரா?**

ஆம், கொரோனா உருவாகிய ஆரம்பத்தில் கொரோனா சீனாவிலிருந்து பரப்பப்பட்டது எனும் கருத்து நிலவியதாலும் கொரோனாவைத் தடுப்பதற்கான தடுப்பூசிகள் பல வகை (6 வகை) உருவாகியமையாலும் மக்கள் மத்தியில் பீதியேற்பட்டதால் சினோபார்ம் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ள ஆரம்பத்தில் பயந்தனர். ஆனால் தற்போது தாமாகவே முன்வந்து ஏற்றிக் கொள்கின்றனர்.

**கேள்வி: எமது மடு பிரதேசத்தில் 20-30 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்படுகினற்து. அதில் எத்தனை சதவீதமானோர் ஏற்றிக் கொண்டனர்?**

60சதவீதத்திற்கு மேற்பட்டோர்.

**கேள்வி: சினோபார்ம் தடுப்பூசி தொடர்பில் மக்கள் மனங்களில் அச்சம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

ஊடகங்கள் சிலவற்றின் போலியான, தவறான கருத்துகளால் மக்கள் பீதியடைந்தமை உண்மையாகும். ஆனால், தற்போது அதன் உண்மைத்தன்மை நிலைவரத்தினை ஓரளவுக்கு அறிந்து, சினோபார்ம் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்கின்றனர்.

**கேள்வி: சினோபார்ம் தடுப்பூசி ஏற்றிக் கொண்டால் குறிப்பிட்ட சில நாடுகளுக்குச் செல்ல முடியாது எனும் கருத்து சமூக மட்டத்தில் நிலவுகின்றது. அது தொடர்பிலான உண்மைத் தன்மை யாது?**

அவ்வாறான கருத்து நிலவியது உண்மையாகும். இதற்குக் காரணம் ஊடகங்களில் வெளியான செய்தியாகும். ஆனால், உண்மை யாதெனில் உலக சுகாதார மையத்தால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கிய தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்ட எவரும் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும். இந்த வகையில் சினோபார்ம் தடுப்பூசிக்கும் உலக சுகாதார மையத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி: சினோபார்ம் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்வதால் யாதேனும் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதா?**

இது வரையில் சினோபாம் தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்ட எவரும் எங்களிடம் பக்க விளைவுகள் தொடர்பில் முறையிடவில்லை.

**கேள்வி: தடுப்பூசி ஏற்றிக் கொண்ட அன்று குளிக்கக் கூடாது எனக் கூறுவதற்கான காரணம் யாது?**

இதனை உளவியல் சார்ந்து தான் பாரக்க வேண்டும். தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்டதன் பின்பு, குளிக்கும் போது இயல்பாகவே வேறொரு காரணத்தினால் அவருக்கு அசாதாரண சூழ்நிலையேற்படும் பொழுது, தடுப்பூசி பெற்றவர் எண்ணக்கூடும் தடுப்பூசி பெற்றதால் தான் தனக்கு இந்நிலையேற்பட்டுள்ளது என்று. எனவே தடுப்பூசி பெற்றதன் பின்பு குளிக்கக் கூடாது எனக் கூறுவதற்கு மருத்துவ ரீதியான எவ்வித காரணங்களும் இல்லை.

**கேள்வி: தடுப்பூசி பெற்றுக் கொண்டதன் பின்னர் அற்ககோல் எடுக்கக் கூடாது எனக் கூறுவதற்கான காரணம் யாது?**

அற்ககோலுக்கு இயற்கையாகவே நோயெதிர்ப்புத் தன்மையைக் குறைக்கும் தன்மையுள்ளது. எனவே, தடுப்பூசியினைப் பெற்றதன் பின்பு, அற்ககோலை உடனே அருந்தும் போது, தடுப்பூசியின் தொழிற்பாட்டினை இது பாதிக்கக் கூடும். இதனால் தான் தடுப்பூசியினைப் போட்டவுடன் குறிப்பிட்ட சில நாள்களுக்கு அற்ககோலை எடுக்க வேண்டாமெனக் குறிப்பிடப்படுகின்றது.

**கேள்வி: 20-30 வயதிற்கிடைப்பட்ட இளைஞர்கள் பயமின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்காக யாதேனும் விழிப்புணர்வு விடயங்கள் பிரதேச ரீதியாக மேற்கொளள்ப்பட்டுள்ளதா?**

குறிப்பிட்ட வயதுப் பிரிவினர்களுக்கு என்றில்லாமல் பொதுவாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள், வாயிலாகவும் பல அறிவிப்புக்கள் ஊடாகவும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கேள்வி: இன்னும் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளாது மறைந்து இருப்பவர்களால் சமூகத் தொற்று திரும்பவும் ஏற்பட வாய்ப்புள்ளதா?**

இவ்வாறான நபர்களுக்குத் தொற்று இருந்தால் இவர்களால் கொரோனாவைப் பரப்ப முடியும். தடுப்பூசி பெற்று ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு கொரோனா தொற்று நோய் ஏற்பட்டாலும் இந் நோய் நிலைமையின் வீரியம் குறைவாகவே காணப்படும். அதேவேளை, தடுப்பூசியைப் பெற்று நீண்ட நாள்கள் சென்றவர்களுக்கு கொரோனாத்தொற்று ஏற்பட நேரிடும் போது கொரோனா கிருமியானது அவர்களது உடலில் இருந்து அழிந்து போகும். ஆனால், தடுப்பூசியினைப் பெறாமல் இருப்பவர்களுக்கு கொரோனாத் தொற்று வந்தால் அவர்களே பெரும் பாதிப்பிற்கு உள்ளாகுவர். சில நேரங்களில் அசாதாரண சூழ்நிலை ஏற்படும் போது இறக்கவும் கூடும்.

**கேள்வி: கொரோனாத் தடுப்பூசி தொடர்பான போலித் தகவல்கள் பல பரப்பப்பட்டு வருகின்றன. அதனைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை?**

போலித் தகவல்கள் பற்றி அரசாங்கத்திற்குத் தெரிய வரும் போது அதனைத் தீவிரமான விசாரணைக்கு உட்படுத்தி, சரியான தகவலை ஊடகங்கள் வாயிலாக அரசாங்கம் அறியத்தருகினற்து. இதில் சுகாதார அரச பணியகம் முக்கிய பங்காற்றி வருகினற்து.

**கேள்வி: சினோபார்ம் தடுப்பூசியும் ஏனைய தடுப்பூசிகளைப் போன்று தானா தொழிற்படுகின்றது?**

ஆம், ஒவ்வொரு தடுப்பூசியும் உருவாக்கப்பட்ட விதங்கள் வேறுபடும்.

**கேள்வி: பல மக்களின் கருத்து பைசர் தடுப்பூசி தான் சிறந்தது என்றும் சினோபார்ம் சிறந்ததில்லை என்றும், இது தொடர்பிலான தங்களது கருத்து என்ன?**

ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் இவ்வாறான கருத்து நிலவி வந்தாலும் அது தற்போது படிப்படியாக மாறி வருகின்றது.

**கேள்வி: இறுதியாக கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் குழப்பமடைந்துள்ள மக்களுக்குத் தாங்கள் கூற விரும்பும் செய்தி யாது?**

ஊரோடினால் ஒத்தோடு.







# தும்பின் துயர் ஒரு துளியா?



செ.ரமேஸ் மதுசங்க
rameshmadhusanka96@gmail.com
நான்காம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாரம்பரிய கைத்தொழில் வரிசையில் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் பொருட்களின் உற்பத்திக்கு நல்லதொரு கிராக்கி உண்டு என்பதை யாவரும் அறிந்ததே. தென்னை மரத்தின் அனைத்துப் பகுதிகளும் ஒவ்வொர் உற்பத்திக்கும் பயன்பட்ட போதிலும் தும்புக் கைத்தொழிலுக்கே தென்னை மிகக்கூடுதலாகப் பயன்படுகின்றது. இதன்மூலம் பாரம்பரிய முறையிலான சிறு கைத்தொழிலாளர்கள் கூடுதலான வருமானத்தை பெற்று வருகின்றனர்.

பண்டைய காலத்தில் தும்புக் கைத்தொழிலே கிராமத்தின் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையாக இருந்திருக்கலாமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆரம்பகாலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினால் அனைத்து பொருட்களையும் செய்து வந்தார்கள். ஆனால் தற்போதைய சூழலில் இயந்திரங்களின் வருகையினால் வேலைப்பழு குறைவடைந்து வருகின்றது. குறிப்பாக கயிறு தரித்தலும், தும்புச்சோற்றை தயாரிக்கவும் நிலத்தை சுத்தப்படுத்தும் தும்புத்தடி வரை இதன் தயாரிப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.



முதலில் தேங்காய் மட்டைகளை லொறிகள் மூலம் ஏற்றி வந்து தும்புக்கான மூலப்பொருளாக தேங்காய் மட்டை பயன்படுத்தப்படுகின்றது. தேங்காய் மட்டைகளை, உரிமட்டைகளை குளங்கள், நீர்நிலைகள், குட்டைகள் என்பவற்றில் ஊறவிட்டு சில நாள்களின் பின்னர், இயந்திரத்தின் உதவியுடன் தும்புச்சோற்றை பிரித்தெடுப்பர். இதற்காக சிறு ஓடைகளை வெட்டி நீர் பாய்ச்சி மட்டைகளை புதைத்து வைப்பது வழக்கம். பின் பதப்படுத்தப்பட்ட தும்பை வெயிலில் உலரவிட்டு அடுத்தகட்ட உற்பத்திக்கான தும்பாக மாற்றுவார்கள்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தும்பானது தடித்த, நீளமான, தூய்மையான இழைகளைக் கொண்டிருப்பதாக உலகசந்தையில் அங்கிகரிக்கப்பட்டு உள்ளது. இன்று கயிற்றுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. தென்னை உற்பத்திப் பொருட்களில் முதன்மையானது தும்பிலிருந்து திரிக்கப்படும் கயிறுகளாகும்.

புத்தளம் மாவட்டத்தின் கொட்டகை பிரதேசத்தின் தும்புக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. கொரோனா தொற்றின் காரணமாக இக்காலப்பகுதியில் இக்கைத்தொழில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. தும்பிற்கான சந்தைவிலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறைவடைந்து உள்ளது. கொரோனாவிற்கு முன் ஒரு கிலோகிராம் தும்பின் விலை ரூபாய் 45 ஆக காணப்பட்டது. தற்போது ரூபாய் 30 ஆக குறைந்து உள்ளது.

இருப்பினும் தும்பு சார்ந்த கைத்தொழிலுக்கு கூடுதலான சந்தைவாய்ப்பு இருந்த போதிலும் தென்னை சார்ந்த பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை, தற்போது இங்கு குறைந்து வருகின்றது. ஏனெனில் அவர்களது வருமானமும் விருத்தியடைந்ததாக தெரியவில்லை. உள்ளூர் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தை நடத்துவதற்கான ஒரு தொழில் அவசியம் என்பதற்காகவே ஆகும்.

தொழிலாளி திருமதி. சுமதி அவர்களிடம் வினவிய போது,

‘தும்புக் கைத்தொழிலை மேற்கொள்வதற்கு அதற்கான முதலீடு தேவை. அவற்றை பெறுவது சவாலாகவே உள்ளது. இதனால் தொழிலை விருத்தி செய்து கொள்ள முடியாத நிலை உள்ளது. தும்புக் கைத்தொழிலுக்கென்று தனியான பயிற்சிகள் வழங்கப்படுவதுமில்லை; நம் தொழிலாளர்கள் பரம்பரையில் கற்றுக் கொண்டதன் வழியாகவே தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால் இயந்திரத்தின் உதவியில் தும்புப்பிரித்தெடுப்பு இலகுவான போதும் அதற்காக பயிற்சிகள், வழிகாட்டல்கள் இதுவரை திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறைகள் ஊடாக வழங்கப்படாமலே உள்ளது.’



எனவே உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வங்கிகள் இலகு கடன் வழங்களை அறிமுகம் செய்ய வேண்டும். மற்றும், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தொழில் வழிகாட்டல் அலகுகள் என்பன தும்புக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கமும், பயிற்சியும் அளிக்க வேண்டும். தும்புக் கைத்தொழிலுக்கு உரிய தொழிற்பயிற்சிகளை பயிற்சி நெறியிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மழைக்காலங்களிலும் தும்புச்சோற்றை உலர வைக்க முடியாததால் தொழிலாளர்கள் வேறு வேலைகள் நிமிர்த்தம் செல்வதால் நிரந்தரமான வேலை பயின்ற தொழிலாளர்களை தக்கவைத்துக் கொள்வது கடினமாகவும் உள்ளது. ஒருபுறம் இக்காலத்தில் சீவியத்திற்கு வேறு தொழில்களையும் பெறுவதும் பாரிய சவாலாகவே உள்ளது.

தொழிலாளி திரு. ராஜேந்திரன் கூறுகையில், “இயந்திரங்களின் மத்தியில் தும்பைப் பிரித்தெடுக்கும் போது, உடல் ரீதியான அபாயங்களையும் சந்திக்க நேரிடுகின்றது. அதாவது நீர்நிலைகளில் தேங்காய் மட்டைகள் நன்கு ஊறிய பின்னர், அந்நீரானது அழுகல் நிலையை அடைந்து விடும். அந்நீர் நிலைகளுக்கு இறங்குபவர்களது கால்கள் அவிந்து, நகங்கள் கழண்டும் காணப்படுகின்றன. தும்புத் தூசுகளால் சிலர் சுவாச நோய்களுக்கும் ஆளாகியுள்ளர். இயந்திரத்திற்குள் கைகளும் சிக்குண்ட வேதனைகள் ஒன்றா?” என தன் கருத்தை முன்வைத்தார்.

இதிலிருந்து தெளிவாவது யாதெனில் முறையான பாதுகாப்பு கவசங்கள், உடைகள் கூட இல்லாத நிலையில் ‘செய்யும் தொழிலே தெய்வம்’ என தொழிலின் வேதனையை, மனதளவில் தொலைந்து விட்டு வாழ்கின்றனர்.

இலங்கையில் முல்லைத்தீவு, பருத்தித்துறை, மருதமுனை, குருநாகல், புத்தளம் போன்ற இடங்களில் தும்புக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தும்புக்கான கேள்வி இன்னும் குறையவில்லை. இருப்பினும் சந்தையில் நிலவும் கேள்விக்கேற்ப அபிவிருத்தியில் பல படிகளை தாண்ட வேண்டியுள்ளது. தும்புக் கைத்தொழிலைப் பொறுத்தவரையில் பணியாளர்கள் குறைந்த கூலியில் வேலை செய்வதா? என சிலர் விலகியும் செல்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் முன்னணி வகிக்கும் வெளிநாட்டு வெற்றியாளர்களையும் முயற்சியாளர்களையும் ஆச்சரியத்தோடு பாராட்டுகின்றோம்; பார்க்கின்றோம். ஆனால், கடுமையான அனுபவங்களை வெற்றிக்குரிய படியாகக் கொண்டு முன்னேறும் எத்தனையோ முயற்சியாளர்கள், எம் பிரதேசத்தில் உள்ளனர் என்பதை நாம் அறிய வேண்டும். அந்தவகையில் தும்புக் கைத்தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டும். அத்தோடு அரசாங்கம் அறிமுகம் செய்த திவிநெகும வாழ்வின் எழுச்சித்திட்டம் ஊடாகவும் இவ்வாறான பாரம்பரிய சிறு கைத்தொழில்களுக்கு அபிவிருத்திகள் வழங்கப்பட்டால் சந்தைப்படுத்தலில் உள்நாட்டு உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரிக்கப்படுவதோடு தொழில் வாய்ப்புகளையும் எட்டிக்கொள்ளவும் முடியும்.

## செனேட்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ்

# ஓர் உள்ளுணர்வுப் பகுப்பாய்வு

சி. நாராயணசுவாமி



செனேட்டர் அஸீஸை, 2021 ஒக்டோபர் மாதம் நான்காம் திகதி நிகழ்ந்த, அன்னாரின் 110ஆவது ஜனன தினத்தை நினைவுகூரும் வேளையில் இம்முஸ்லிம் தூரதரிசன மாமனிதர் பற்றிய பல நினைவுகள், சிந்தனைக்கு வருகின்றன.

பெரும் புத்திசாதுரியம் நிறைந்த வல்லுநனராகவும் திறமையான நிர்வாகியாகவும் புலமை ஆற்றல் மிகுந்தோனாகவும் சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்த அன்னார், நாட்டுக்கும் மக்களுக்கும் குறிப்பாக, முஸ்லிம் சமுதாயத்துக்கு ஆற்றியுள்ள சேவைகள் சேமமாக ஆவணப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

மனித வாழ்க்கையின் வளர்ச்சிப் பாதையில் சந்திக்கின்ற சவால்களை வெற்றிகொள்கின்ற ஊக்கமிகு உதாரணங்கள் அன்னாரின் வாழ்க்கையில் காணக்கிடைக்கின்றன.

செனேட்டர் அஸீஸுடனான என்னுடைய இணைப்பு, என்னுடைய 16ஆவது அகவையின்போது அடையப்பெற்றேன். என்னுடைய ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் கற்ற காலம் அது. செனேட்டர் அஸீஸும் இவ்வறிவகத்தின் ஆதி சீடன் ஆவார்.

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் அஸீஸ் அவதரித்தார்கள். அது போன்று நானும் அங்கேயே பிறந்தேன். அறிவாளிகள் அமர்ந்திருந்த செயலமர்வுகளில், ஆறுமுகநாவலரின் போதனைகள் பற்றி அஸீஸ் ஆற்றிய பேருரைகள் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், பாரம்பரிய பண்பாடுகள் சம்பிரதாயங்கள் தொடர்பாக அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அறிவு நம்பமுடியாதவாறு வியப்பை நல்கின.

உயர் பண்புடன், மாட்சிமை நிறைந்த பின்னணியைக் கொண்டிருந்த யாழ்ப்பாண முஸ்லிமான அஸீஸுக்கு இப்புலமைகள் இயற்கையாகவே அமைந்திருந்தன.

> செனேட்டர் அஸீஸ், மனிதர்களில் ஒரு மாணிக்கம். எனக்கு வழிகாட்டியாகவும் நம்பத்தகு நண்பனாகவும் விளங்கிய பெருந்தகைக்கு என்னுடைய சமர்ப்பணம் இது

செனேட்டா அஸீஸ், யாழ்ப்பாணத்தில் பிரபல இரண்டு இந்துக் கல்லூரிகளான வைத்திஸ்வரா வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கற்று, பொலிவுடன் பிரகாசித்தவராகத் திகழ்ந்தார். அவர் இக்கல்லூரிகள் பற்றிப் பெருமிதம் கொண்டிருந்ததுடன், அங்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியப் பெருந்தகைகளின் வழிகாட்டல்கள், பயிற்சிகள் காரணமாக தமிழ் மொழியிலும் இந்து சமயத்திலும் சிறந்து விளங்கினார்.

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தன்னுடைய கற்கைக் காலப்பகுதியை இவ்வாறு கணித்துள்ளார். " இங்கே நான் கற்ற காலப்பகுதி, 1921 மாசி மாதம் தொடக்கம் 1923 ஆனி மாதம் வரையிலுமான காலப்பகுதி அளவில் குறைந்திருந்தபோதிலும் தரத்தில் நிறைந்திருந்தது. காலாகாலமாக உலகம் முழுவதிலும் வியாபித்து விளங்கும் தொன்மையும் தூய்மையும் நிறைந்த இனிமைத் தமிழ் மொழியில், கண்ணியமும் கருத்தாழமும் நிறைந்த தெய்வபக்திப் பாடல்கள் எனக்கு அறிமுகமானது வித்தியாலயத்திலேயே".

அஸீஸ், 1929ஆம் ஆண்டில் பல்கலைக்கழகக் கல்லூரிக்கு உள்வாங்கப்பட்டார். அங்கே, வரலாற்றுத் துறையில் நிதர்சனம் செய்து காண்பிப்பவராகத் திகழ்ந்ததுடன் 1933 இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்று அரச புலமைப் பரிசில் வழங்கப்பட்டு கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்துக்குப் பட்டப்பின் படிப்பைத் தொடரச் சென்ற அவர், இலங்கைச் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்த காரணத்தால், சிறிது காலம் கழித்து இலங்கைக்குத் திரும்பினார். அந்தக் காலத்தில் அதி உன்னதமாகவும் பெரிதும் மதித்தும் போற்றப்பட்ட சேவையில் இணைக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் அஸீஸ் ஆவார்.

1959 இல் என்னுடைய பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட நான், என்னுடைய மரியாதையைச் செலுத்துவதற்கு அஸீஸ் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது, அவர் என்னைச் ஸாஹிராவில் ஆசிரியராக இணையுமாறு ஆலோசனை வழங்கினார். நான் சிவில் சேவைப் பரீட்சைக்குத் தோன்ற இருப்பதால், அதற்கு ஆயத்தப்படுத்த ஓய்வு தேவை என்றேன். கற்பித்துக்கொண்டே கற்குமாறு ஆசி வழங்கினார். 1960 பங்குனி மாதத்தில் சிவில் சேவைப் பரீட்சையில் தேறிய எட்டுப் பேரில் நானும் ஒருவன் ஆனேன். தன்னுடைய கல்லூரி மாணவனின் சாதனையையிட்டு அஸீஸ், அடைந்த அளவிலா ஆனந்தத்தை வார்த்தைகளால் வடிக்க முடியாது. அன்பு ஊற்றாகவும் இரக்க சுபாவமானவரான இந்த மாமனிதருடன் அறிமுகத்தைப் பெற்றுக் கொண்டதையும் அன்னாருடன் பழகியதையும் பெரும் பாக்கியமாகவே பார்க்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் பார்புகழ் மெய்யியல் வித்தகரும் நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பேட்ரம் ரசலின் எழுத்துகள் என்னுடைய நினைவுக்கு வருகின்றன. 'வாழ்க்கையில் அதிமுக்கிய பெறுமானங்கள் பணத்தால் அளவு செய்யப்படுவதில்லை. காணி, பூமி, வீடுமனைகள், வங்கிவைப்புகள் அல்ல அப்பெறுமானங்கள்; மாறாக, அப்பெறுமானங்கள், அன்பு, நம்பிக்கை, இரக்க சுபாவம், நம்பகத்தன்மை ஆகியவை ஆகும். செனேட்டர் அஸீஸ், இலங்கையில் அனைத்துச் சமூகங்களுக்கிடையிலும் அன்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டி எழுப்பிய தலைவராவார்.

அன்னார் எம்மையும் இவ்வுலகத்தையும் விட்டுப் பிரியும் வரையிலும் நான் அவருடன் தொடர்ச்சியான தொடர்பில் இருந்தேன். ஆங்கிலம், தமிழ் இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த அளப்பரிய புலமையால் நான் கவரப்பட்டேன்.

ஸாஹிராவின் பழைய மாணவர்களான 'தினகரன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரான காலஞ்சென்ற சிவகுருநாதன், காலஞ்சென்ற வாழ்நாள் பேராசிரியர் சிவத்தம்பி, நான் ஆகியோர் அஸீஸின் இல்லத்துக்குச் சென்று, கல்வி தொடர்பான கருத்துகளைப் பரிமாறிக்கொள்வோம். அறிவுப் பரிமாற்றங்களில் சில அபிப்பிராய பேதங்கள் எழுந்தால், அவற்றைச் சுமூகமாக ஏற்றுக்கொள்வோம். எம்முடைய உரையாடல்களின்போது, அவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் அருமை மகளும் உபசரிக்கத் தவறியதில்லை. ரமழான் மாதத்தில் வழங்கப்பட்ட வட்டிலப்பத்தை இன்னும் மறக்கவில்லை. இஸ்லாமிய இலக்கியம், அரபுத்தமிழ், இஸ்லாமிய கலாசாரப் பண்பாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அன்னார் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இலங்கை முஸ்லிகளைக் கல்வித்துறையில் மேம்படுத்தும் நோக்கத்துடன் பேரும் புகழும் அதிகாரமும் ஒருங்கிணையப்பெற்ற அரச சிவில் சேவையைத் தியாகம் செய்த, மனித மாணிக்கம் அஸீஸ் ஆவார். இத்தியாகம் போன்ற வேறு நிகழ்வு இலங்கை வரலாற்றில் நிகழவில்லை.

சிவில் சேவையில் இணைந்த முதலாவது முஸ்லிமான அவருக்கு அரச சேவையில் அதிசிறந்த எதிர்காலம் இருந்தது. ஆனால், தன்னுடைய சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கும், கலாசார மறுமலர்ச்சிக்குமான அர்ப்பணிப்பு அவரிடம் மேலோங்கி இருந்தமையால், ஸாஹிராவின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

அவருடைய இத்தீர்மானம், இலங்கையின் பல்கலாசார சமூகங்கள் போன்று முஸ்லிம் சமூகமும் உயரவேண்டுமென்ற உண்மையானதும் உத்தமமுமான அபிலாஷையுடன்

> வாழ்க்கையில் அதிமுக்கிய பெறுமானங்கள் பணத்தால் அளவு செய்யப்படுவதில்லை. காணி, பூமி, வீடுமனைகள், வங்கிவைப்புகள் அல்ல அப்பெறுமானங்கள்; மாறாக, அப்பெறுமானங்கள், அன்பு, நம்பிக்கை, இரக்க சுபாவம், நம்பகத்தன்மை ஆகியவை

எடுக்கப்பட்டதால் அன்னார் முஸ்லிம் சமூகத்தின் தலைவராகவும் உயர்ந்தார்.

13 வருடங்கள் நீடித்த அவருடைய அதிபர் காலப் பகுதியில், கல்லூரி உயர்ந்த கல்வித்தரத்தை எட்டியது. பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் அனுமதியும் அதிகரித்தது. அனைத்து இனங்களையும் சேர்ந்த மாணவர்களின் தனித்தனிக் கல்வி தகைமைகளுக்கு அமைந்தவாறு அவர்களை ஒருங்கிணைத்து, அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் முயற்சிசெய்து ஸாஹிராவின் உயர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இதற்கு ஓர் உதாரணமாக நான் உள்ளேன்.

எவ்வித இனபேதமும் கலாசார வேறுபாடுமில்லாத ஒரு தமிழனான நான், அஸீஸ் அவர்களை அனைத்து சமூகங்களுக்குமான ஒரு விவேகமான இராஜதந்திரி ஆகவும் ஒரு புலமை மிகு கல்வி வித்தகனாகவும் திகழ்ந்தார் எனக் குறிப்பிட்டுக் கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

ஒரு முன்னோடிக் கல்விமானாக அவர் ஏனைய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்தணைத்து ஊக்குவித்தார். திருக்குறள், திருவாசகம், கம்பராமாயணம், புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய தமிழ்ப் பெரும் காப்பியங்களை கௌரவித்துப் பாரறியச் செய்ய, பலப்பல கூட்ட அமர்வுகள் ஏற்பாடு செய்துள்ளார். செனேட்டர் அஸீஸ், மனிதர்களில் ஒரு மாணிக்கம். எனக்கு வழிகாட்டியாகவும் நம்பத்தகு நண்பனாகவும் விளங்கிய பெருந்தகைக்கு என்னுடைய சமர்ப்பணம் இது.

(கட்டுரையாளர் சி. நாராயணசுவாமி, ஸாஹிராவில் அஸீஸ் யுகத்தில் மாணவனாகவும் ஆசிரியராகவும் இருந்தார். பின்பு சிவில்சேவை அதிகாரியாகவும் அதன் பின்னர் ஐக்கிய நாடுகள், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிறுவனங்களிலும் கடமையாற்றி, 1996 இல் ஓய்வு பெற்றார்.)

தமிழாக்கம்: எஸ். எம். எம். யூசுப்



# கோட்டை வாசலில் 'காலக்கண்ணாடி'

## பாதுகாக்கப்படாத கல்வெட்டும் அழிக்கப்படும் வரலாறும்



அ. அச்சுதன்

இலங்கையின் சிறந்த அரணாக விளங்குவது திருகோணமலை; அன்று இலங்கையைப் பிடிக்கும் நோக்கமாக வந்த போர்த்துக்கேயர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரும், முதன் முதலாகக் கால்பதித்த இடம் திருகோணமலைதான்.

இலங்கையில் தமிழர்கள் முதல் முதலாகக் கால் பதிந்த பிரதேசம், வாழ்ந்த பிரதேசம் திருகோணமலைதான். இங்ஙனம், தமிழர் நாகரிகம் பரவியிருந்த பிரதேசத்தில், அதன் நடுநாயகமாக ஒரு சைவ நகரம் (கோவில்) இருந்திருத்தல் இயல்புதான்.

இத்தகைய புராதனப்பெருமை வாய்ந்த ஸ்தலத்தின் வரலாறு முழுவதும் கிடைக்கப் பெறாமை, தமிழர் தம் தவக்குறையென்றே சொல்லலாம். பண்டைய வரலாறு, காலத்திரையல் மூடப்பட்டுக் கிடக்கின்றது. ஆனாலும் கிடைத்த வரலாற்று விடயங்களை, கல்வெட்டுகளைக் கூட பாதுகாக்க முடியவில்லை என்பது மிகவும் கவலையான விடயம்.

ஈழத்தில் பாடல் பெற்ற சிவஸ்தலங்களாயிருப்பன திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னுமிரண்டுமாகும். தமிழ் நாட்டுத் திருத்தலங்களின் வரலாறுகள், பன்னெடுங்காலமாக அகில உலகச் சைவமக்களின் நெஞ்சில் நிலைபெற்றிருப்பது போன்று, ஈழ நாட்டுத் திருத்தலங்களும் இந்துக்களின் இதயத்தில் இருந்து வருகின்றன.

திருக்கோணேஸ்வரம், இலங்கையின் கிழக்கே, கிழக்கு மாகாணத்தில் உலகப் பிரசித்திபெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருகோணமலைத் துறைமுகம் அமைவதற்குச் சாதகமாயுள்ள மலைகளொன்றின் உச்சியில் இருக்கின்றது.

மூன்று மலைகளைக் கொண்டு முக்கோண வடிவில் அமைந்திருப்பதால் திருக்கோணமலை, திருகோணமலை என்று இந்த நகரம் பெயர் பெற்றது. இந்த நகரத்தில் பிரசித்தி பெற்ற திருத்தலம், கோணேஸ்வரம் ஆதலால் திருகோணமலை எனவும் இந்த நகரம் பெயர் பெறுகின்றது.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இந்துக்களின் திருத்தலமாகிய திருக்கோணேஸ்வரம் புனித சேஷத்திரமாக இருந்து வந்ததைப் புராண, இதிகாச வரலாறுகள் கூறுகின்றன.

எனவே இந்தத் தலத்தின் இயல்பான தெய்வீக விசேடத்தாலே, இந் நகரம் திருக்கோணமலை என்ற பெயரால் வழங்கி வருகின்றது. மேலும், இலங்கையை அரசாண்ட தேவனம்பியதீசன் காலத்தில், புனித வெள்ளரசு மரக் கன்றுடன் சங்கமித்தை இந்தத் தலத்தில் வந்திறங்கியதாயும் அப்பொழுது கோகர்ணம் என்று இதற்குப் பெயர் வழங்கி வந்ததென்றும் மகாவம்சத்திலிருந்து அறியக்கிடக்கிறது.

போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டு இலங்கையில் கால்தடம் பதித்தனர். போர்த்துக்கேயரின் வருகையின் பொழுது, திருகோணமலை மாவட்டம் நான்கு பிரிவுகளாக இருந்து. கொட்டியாரம்பற்று, தம்பலகாமம் பற்று, கட்டுக்குளப்பற்று, திருகோணமலை நகர் ஆகிய நான்கு பிரிவுகளாகும். இவற்றை தமிழ் வன்னிய குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆளுகைக்குள் திருகோணமலை உட்பட்டிருந்தது. ஆனாலும், கொட்டியாரம் பற்று காலத்துக்குக் காலம் கண்டிய மன்னர்களின் ஆட்சியிலும் இருந்தது. 1551 ஆம் ஆண்டில் சங்கிலியனின் ஆட்சி அஸ்தமிக்கத் தொடங்கிய பொழுது, கண்டி இராச்சியம் எழுச்சி பெற்றது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றிய போர்த்துக்கேயரை அகற்றுவதற்காக, கண்டிய மன்னன் செனரத் விடாமுயற்சி கொண்டான். அதற்காக டச்சுக்காரருடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். இச் சூழ்நிலையில் டச்சுக்காரர் திருகோணமலையைப் பிடிக்க முடியாமல் தடுப்பதற்கு போர்த்துக்கேயர் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கோட்டை ஒன்றை கட்டுவதற்கு போர்த்துக்கேய தளபதி கொன்ஸரன்ரைன் டி சா, கோணேஸ்வர ஆலயம் அமைந்திருந்த மலைப்பகுதியை தெரிவு செய்தான் என்பது வரலாறு.

இந்த நிலையில், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் புராதன வரலாற்றுச் சாசனங்கள் நிறையவே காணப்படுகின்றன. காலத்தால் இன்றும் பேசப்படும் ஒரு விடயத்தை பதிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சடையவர் மகன் வீரபாண்டியன், இலங்கை அரசனான முதலாம் புவனேகபாகுவை அடக்கித் திருகோணமலையில் தன் கயற்கொடியைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொறித்தான் என்று தென்னிந்தியக் கோயில் சாசனங்களில் ஒன்றான குடுமியாமலைச் சாசனம் கூறுகின்றது.

இவ் வினைக் கயல் மீன்கள், திருகோணமலை பிரட்ரிக் கோட்டை நுழைவாயிலின் இரு மருங்கிலும் இப் பொழுதும் காணப்படுகின்றன. அத்துடன் அன்று ஆயிரங்கால் கோவில் என்று அழைக்கப்பட்ட கோணநாதர் கோவில் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் சிறு பகுதியொன்று, பிரட்ரிக் கோட்டை வாசல் தூணில் உள்ள மீன் சின்னத்துக்குக் கீழே இன்றும் சிதைந்த நிலைமையில் காணப்படுகின்றது. இக் கல் வெட்டானது குளக்கோட்ட மன்னன் காலத்து தீர்க்க தரிசன கல்வெட்டாகும்.

கல்வெட்டை போர்ச்சுக்கேய மூலத்துடன் ஒப்பிட்டு பிரபல தமிழ் பண்டிதர் ஒருவரின் உதவியுடன் முதலியார் ஸி. ராஜநாயகம் (யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற பிரபல நூலின் ஆசிரியர்) கீழ்க்கண்டவாறு திருத்தி எழுதினார்.

முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை
பின்னே பறங்கி பிடிக்கவே– மன்னாகேள்
பூனைக்கண், செங்கன், புகைக்கண்ணன் போனபின்
மானே வடுகாய் விடும்.

குளக்கோட்டு மன்னன் இந்தக் கோவிலைக் கட்டுவித்த பொழுது, அதன் வரும் காலம் எப்படியிருக்கலாமென்ற சோதிடத்தை இப்படி கல்லில் எழுதி வைத்திருந்தார்கள். கோவிலை இடித்த போர்த்துக்கேயர்கள் இதைப்பார்த்து ஆச்சரியமடைந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது.

முன்னர், குளக்கோட்ட மகாராஜாவால் கட்டப்பட்ட இந்தக் கோவிலை, பிறகு ஒரு சமயம் பறங்கிகள் பிடித்துக் கொள்வார்கள்; பிறகு பூணைக்கண்ணர்கள், சிவப்புக் கண்ணர்கள், புகைக் கண்ணர்கள் ஆகிய பல சாதியினர் ஆதிக்கத்திலிருந்து விட்டு, கடைசியாக வடுகர்கள் (தெலுங்கர்) ஆதிக்கத்துக்குப் போய்விடும் என்பது இதன் கருத்தாம் என குறிப்பிடப்படுகின்றது.

காலவெள்ளத்தைக் கடந்து வந்த இந்தக் கல்வெட்டு, கோட்டையின் முகப்பில் இன்றைக்கும் தென்படுகிறது . எனவே திருகோணமலையின் வரலாற்றுடனும் ஈழத்தில் தமிழரின் அடையாள சின்னமாகவும் இவ் விடயம் திகழ்வதுடன், திருக்கோணேஸ்வரத்தின் வரலாறுகளை விவரிப்பதாகவும் காணப்படும் இச்சாசனங்களின் இன்றைய நிலை பற்றி பார்க்கின்ற போது மிகவும் கவலை அளிக்கின்றது.

வீதிகளுக்கு பூசப்படும் வர்ணங்கள், இச் சாசனக்கல் மீது பூசப்பட்டிருப்பதால், சாசனங்களின் தொன்மை சிதைக்கப்பட்டு இருப்பதுடன், அதன் சிறப்பும் அதன் அழகும் அழிக்கப்பட்டிருக்கின்றது. இச் சாசனம் அமைந்துள்ள பிரட்ரிக் கோட்டை வாசலின் ஊடாக தினமும் வாகனங்கள் பயணிப்பதால் அதன் அதிர்வுகளாலும், வாகனங்களின் புகைகளலும் சாசனங்கள் மேலும் சேதம் ஆவதற்கு நிறையவே வாய்ப்புகள் உண்டு.

வரலாற்றை அழிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறதா எனும் சந்தேகமும் இதனால் ஏற்படுகின்றது. தொல்பொருள் திணைக்களம், இந்தப் புராதன வரலாற்று சின்னங்களைப் பாதுகாக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது . இந்த நிலையில், இச்சாசனங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் திருக்கோணேஸ்வரத்தின் ஆலய பரிபாலன சபையினருக்கும் திருகோணமலை மண்ணின் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இருக்கின்றது. இவ் விடயத்தில் இவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா......?

# கவனக்குறைவான நடத்தைகளை உடனடியாகக் கைவிடுங்கள்

இன்னும் எட்டு நாள்களுக்குள் எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி, நாடு முழுமையாக இயங்கும் நிலைக்கு வருகிறது என்பதையிட்டு ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். இதுவரையிலும் அமல்படுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள், அன்றையதினம் முழுமையாக நீக்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றாகத் திறக்கப்பட்டு, இறுதியில் 200 மாணவர்களுக்கு கீழுள்ள பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. இன்னும் சில பாடசாலைகளைத் திறப்பதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நவம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர், பொதுப் போக்குவரத்து சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேல் மாகாணத்துக்கு இடையிலான ரயில் போக்குவரத்துச் சேவைகள் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவிருக்கிறது. அன்றையதினம்தான், அதிபர்-ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு சமூகமளிப்பதாக அறிவித்திருக்கின்றனர். அத்துடன், தடுப்பூசிகளைச் செலுத்தும் செயற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. 16-19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசிகளை செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால், கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், கொரோனா தொற்றால் பீடிக்கப்பட்டு மரணிப்போரின் எண்ணிக்கையும் குறைவடைகின்றதே தவிர, பூச்சியத்துக்கு செல்லவில்லை. ஆகையால், சுகாதார வழிகாட்டல்கள் இன்னுமின்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டியது தார்மிக பொறுப்பாகும். முகக்கவசனங்களை அணிந்திருப்பது அவசியமாகும்.

பொதுவெளியை எட்டிப்பார்த்தால் சிற்சில இடங்களில், அவ்வாறே கடைப்பிடிக்கின்றார்கள் என்பதைப் பார்க்கமுடிவதில்லை. இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டவர்களுக்கு எதிர்ப்புச் சக்தி அதிகரித்திருக்கும் என்பதால், கொரோனாவின் தாக்கம் குறைந்திருக்கும். இன்னும் சிலருக்கு கொரோனா தொற்றிச் சென்றிருக்கும் என்றெல்லாம் யூகிக்கப்படுகின்றது.

கண்களுக்குத் தெரியாத வைரஸ், சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் அலையலையாய் வந்து சென்றிருக்கின்றது. நாடு முழுமையாக முடக்கப்பட்டு, ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, இறுதியாக அமலில் இருந்த மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்படுவதற்கான அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னர், சீனாவில் மற்றுமொரு கொரோனா அலை உருவாகிவிட்டது என்ற கசப்பான செய்தியும் மயிர்கூச்செறியச் செய்கின்றது.

கொரோனாத் தொற்று, சீனாவில் இருந்தே முழு உலகத்துக்கும் பரவியது என்பதை மறுப்பதற்கில்லை. அதிலிருந்து மிகத்துரிதமாக மீண்டெழுந்த சீனாவில், ஏனைய நாடுகளை விடவும் மரணித்தோரின் எண்ணிக்கை குறைவானதாகவே இருந்தது. அதேபோல, தடுப்பூசியை ஏனைய நாடுகளுக்கு அன்பளிப்புச் செய்தல், அதன்பின்னர் விற்பனை செய்வதில் மிகத்துரிதமாக சீனா செயற்பட்டது.

பொதுப் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஒருமீற்றர் இடைவெளியைப் பேணுவது சிரமமாகவே இருக்கும். என்றாலும், அதையும் பேணுவதே, அடுத்த அலைக்குள் விழுந்து விடாமல் இருப்பதற்கான ஒரே வழியாகும் என்பதால், கவனக்குறைவான நடத்தைகளை உடனடியாகக் கைவிடவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

யாவரும் நீதிபதியாக வாழமுடியும். நீதி, நேர்மையுடன் வாழ்பவர்கள், தமக்குத் தாமே நீதிபதியாக வாழ்வது ஏற்றுக்கொள்ளக் கூடியது. இது ஒரு நிர்மலமான உயர்நிலை.

நேர்மையாக வாழ்பவர்களுக்குப் பயம், படபடப்பு என்பன இருக்காது. தன்னையும் தனது நெஞ்சத்தையும் தூய்மையாகப் பேணுபவர்கள், சாதாரணமான எளிய வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மக்கள் நியாய தர்மங்களை நிராகரித்தால், உலகம் தளர்ந்துவிடும். இதனால், உலகத்தின் சமநிலை உடைந்து, அதன்விளைவால் உருவாகும் எதிர்மறை விளைவுகள், வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவைகளாக இருக்கும். மக்களுக்கு தாங்க முடியாத அழிவுகளை ஏற்படுத்திவிடும்.

மக்களின் பலம், அவர்களின் உண்மையான வாழ்க்கையால்தான் உருவாகின்றது. இந்த உண்மையை உலக மக்கள் உணர்ந்தேயாக வேண்டும்.

அரசாங்கமும் மக்களைச் சமநிலையில் நீதி, நேர்மையுடன் நடத்தவேண்டும். இன, மத, மொழி பேதங்கள் காட்டாது, அனைவரையும் அரவணைக்க வேண்டும். உலகத்தில் வாழும் சகலருக்கும், தனிமனித ஒழுக்கம் அவசியமானது. ஒழுக்கத்தில் முதன்மையானது, நீதி.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இனப்பரம்பலை மாற்றவா சிங்களக் குடியேற்றம்?

லக்ஸ்மன்

ஒன்றில் அதிகாரத்தைக் குறைப்பது; அல்லது, குடியேற்றத்தை நிகழ்த்தி இனப்பரம்பலைக் குறைப்பது. இதுதான், இலங்கை அரசாங்கத்தின் தாரக மந்திரம். இரண்டும் நல்ல திட்டமே!

திட்டமிட்ட வகையில் நடைபெறும் குடியேற்றங்களால், தமிழர்களின் வடக்கு - கிழக்கு பூர்வீக தாயகம் என்ற நிலைப்பாட்டில், நிரந்தரமாக மாற்றத்தை ஏற்படுத்திவிடவேண்டும் என்ற விடாப்பிடியே இதிலிருந்து புலப்படும்.

இந்த வகையில்தான், இலங்கையின் சிங்கள பெரும்பான்மை அரசுகள், தமிழர்களின் மரபுவழித் தாயக நிலப்பரப்புகளில் தமிழர்களின் மரபுவழி உரிமைகளைச் சிதைக்கும் வண்ணம், திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றன என்ற தமிழ்த் தரப்பின் குற்றச்சாட்டும் பலமுடையதாக இருக்கிறது.

அதன் ஓர் அங்கமே, கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணியில் சிங்கள குடியேற்றம் செய்ய நடைபெறுகின்ற முயற்சியாகும். 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போன்று, அண்மைய உதாரணமாக இந்தக் காரமுனையைக் கூறமுடியும்.

இந்த வாரத்தில் நடைபெற்ற காராமுனை பகுதியில் சிங்கள மக்களை குடியேற்றும் செயற்பாட்டுக்கு எதிராக, அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர். வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மாங்கேணி கிராம சேவையாளர் பிரிவின் காராமுனை பகுதியில், 1982ஆம் ஆண்டுக்கு முன்பாக சிங்கள மக்கள் குடியிருந்ததாக கூறி, அவர்களுக்கான நடமாடும் சேவையொன்று புனாணையிலுள்ள வனஇலாகா திணைக்களத்தில் நடத்தப்பட்டுள்ளது. இதன் போதே இந்த எதிர்ப்பு இடம்பெற்றுள்ளது.

இதில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை தவிசாளர் எஸ்.சர்வானந்தன், மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கு கொண்டுள்ளனர்.

அதனால், அப்பகுதிக்கு பெருமளவான பொலிஸார் வரவழைக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. குறித்த காணி நடமாடும் சேவைக்கும் சிங்கள மக்களது குடியேற்றத்துக்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், குறித்த பகுதியில் எதுவித குடியேற்றமும் செய்யப்படாது எனவும் காணி ஆவணங்களை மட்டும் பரிசோதனைகள் செய்து, பின்னர் அவர்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என காணி ஆணையாளரால் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனிடம் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இங்கு வருகை தந்திருந்த சிங்கள மக்கள், "1976ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால், எங்களுக்கு விவசாயம் மேற்கொள்வதற்கு ஐந்து ஏக்கர் காணியும் குடியிருப்பதற்கு ஓர் ஏக்கருமாக மொத்தமாக ஆறு ஏக்கர் ஒரு குடும்பத்திற்காக, 190 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின் காரணமாக, நாங்கள் இடம் பெயர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வந்தோம். யுத்தம் முடிந்த பின்னர், நாங்கள் எங்களுக்கான காணியை வழங்குமாறு, அரச திணைக்களங்களுக்கு முறையிட்டதன் பயனாக, காணிகளை அடையாளப்படுத்துமாறு காணி திணைக்களத்தால் அழைக்கப்பட்டதற்கிணங்க வருகை தந்தோம். எமது காணிகள் வேறு நபர்களால் பராமரிக்கப்பட்டு வருமாக இருந்தால் எங்களுக்கு மாற்றுக் காணி வழங்குமாறு தெரிவித்துள்ளோம்" என்றனர்.

"வாகரைப் பிரதேசம், தமிழ் பேசும் மக்களின் பிரதேசம்; இங்கு அரசாங்கத்தால் திட்டமிட்டு சிங்கள மக்களை குடியேற்றம் செய்ய நடவடிக்கைகள் நடக்கின்றன. அதற்கு நாங்கள் ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டோம்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

"காரமுனை பிரதேசத்தில், சிங்களக் குடும்பங்களைக் குடியேற்ற முயற்சிக்கப்படுகின்றது. இதற்கு அதிகாரிகள் பதவியைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக துணைபோகக் கூடாது" என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்திருந்தார். அதே போன்று பல்வேறு அரசியல்வாதிகளும் தமது கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான திட்டங்கள், நிலமற்ற சிங்களவர்களுக்கு நிலம் தரும் திட்டங்களாக அரசால் பரப்புரை செய்யப்பட்டாலும், காலங்காலமாக அப்பிரதேசங்களிலேயே வாழ்ந்துவரும் தமிழர்களின் உரிமைகளை, கருத்துகளைப் பொருட்படுத்துவதேயில்லை என்பதுதான் இதிலுள்ள பெரும் குறையாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது பெரும்பான்மை மக்களின் பலவந்தமான குடியேற்றங்களே! இருந்தாலும் இதனை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கங்கள் தயரில்லை என்பதே கசப்பான உண்மை.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஆனால், அரசு இலங்கையில் தமிழ் மக்களின் நிலங்கள் சிங்களமயமாக்கப்படுவதையும் ஆக்கிரமிக்கப்படுவதையும் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையையும் எடுப்பதில்லை. அதற்கு ஆதரவு வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்தி, வரப்பிரசாதங்களையும் வழங்குவதே தமிழ் மக்களை கவலைக்குள் தள்ளிவிடுகிறது.

இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிந்து 12 ஆண்டுகளுக்குப்பின்னும், இன்னமும் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமானதாகவே அரசு செயற்பட முனைந்து கொண்டிருப்பது பல இடங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் பயனில்லை.

வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாகப் பிரிக்கும் அரசாங்கத்தின் முக்கிய நோக்கத்துடன் சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள், யுத்த வெற்றி நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் நில ஒதுக்கீடுகள், வனவிலங்குகள் சரணாலயங்கள், வனப்பகுதி ஒதுக்கங்கள், விசேட பொருளாதார வலயங்கள் என்ற போர்வையில், தமிழ்க் கலாசாரத்தையும் வரலாற்றையும் திட்டமிட்டு அழிக்கும் செயற்றிட்டங்கள் முன் நகர்த்தப்படுகின்றன. இதற்கு அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் கூட உடந்தையாகவே இருக்கின்றனர்.

வன பரிபாலனம், வன விலங்கு பாதுகாப்பு போன்ற காரணங்களின் ஊடாக, தமிழர்களது பிரதேசங்களுக்குள் நடைபெறும் கால்நடை வளர்ப்பு, சேனைப் பயிர்ச்செய்கை போன்றவை தடுக்கப்படுகின்றன. அதேவேளையில் சிங்கள மக்களுக்கு, இராணுவம், சிவில் பாதுகாப்பு தரப்பினர் என நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

அதேநேரத்தில், தொடர்ச்சியாக பெருந்தொகையான சிங்கள மக்களை, தமிழர்களது பகுதிகளில் குடியேற்ற முயல்வது, பாதகமானதாகவே பார்க்கப்பட்டு வருகிறது.

2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து, தற்போது செயற்படுத்தத் தொடங்கப்பட்டிருக்கின்ற நீர்ப்பாசன திட்டங்கள், இராணுவ குடியேற்றங்கள், தொல்பொருள் இட ஒதுக்கீடுகள், வனவிலங்கு சரணாலயங்கள், வனப்பகுதி, சிறப்பு பொருளாதார வலயங்கள் போன்றவைகள் மூலம், ஏற்கெனவே சூறையாடப்பட்டுவிட்ட கிழக்கின் பல பகுதிகள், மேலும் அபகரிக்கப்படுவதாகவே கொள்ள முடிகிறது.

தமிழர்கள் அவர்களது பரம்பரை நிலங்களைப் பயன்படுத்த அனுமதி மறுப்பது, கிராமங்களின் பெயரை மாற்றுவது, சிங்கள மேலாண்மையை நிலைநாட்டும் நினைவுச்சின்னங்களை நிறுவுவது போன்றவை தமிழர் வரலாறு, கலாசாரத்தை அழிக்கும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

பாரம்பரிய தமிழரின் தாயகத்தை, புவியியல் ரீதியாகத் துண்டாட வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் உத்தி என்ற வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்ததனியாகப்பிரிக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்பட்டன. அரசாங்கத்தின் பெரும்பான்மைத்தனத்துடனான செயற்பாடுகளுக்கு நாட்டில் வலுவான சட்டங்களைக் கொண்டவைகளான மகாவலி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக உருவாகுவதற்கு முன்னர் நடைபெற்றுக் கொண்டிருந்த குடியேற்றங்கள், யுத்த காலத்தில் ஓய்ந்திருந்த போதும், ஆக்கிரமிப்புத் தனம் யுத்தத்துக்குப்பின்னர் தீவிரமடைந்துகொண்டே இருக்கிறது. அத்துமீறல்களாகவும் அதிகாரத்துடனும் ஆவணங்களுடனும் என உருமாற்றங்கள் செய்யப்பட்டு வந்தவண்ணமே இருந்து கொண்டிருக்கிறது.

யுத்தம் முடிந்த கையோடு தமிழர்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக பயன்படுத்தி வரும் மட்டக்களப்பு எல்லையிலுள்ள மாதவணை, மயிலத்தமடு பிரதேசங்களில் அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் அப்பிரதேசங்களில் குடியேறினர். அது ஓரளவுக்கு சரி செய்யப்பட்டு ஒரு போக பயிர்ச்செய்கையுடன் நிறுத்தப்பட்டது.

பின்னர், பொது ஜன பெரமுன ஆட்சி உருவானதன் பின்னர், மீண்டும் தொடங்கப்பட்டு பண்ணையாளர்கள் பிரச்சினைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அதே போன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் பல பிரச்சினைகள் நடந்த வண்ணமேயிருக்கின்றன.

இப்போதைய நிலையில், காரமுனை ஓர் அண்மைய உதாரணமே! இது போன்றே வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நகரமான புல்மோட்டையில், தென்னமரவாடிக்கு அண்மையாகவுள்ள பகுதியில், இரண்டு புதிய சிங்கள குடியேற்றங்கள், சட்டவிரோதமான முறையில் உருவாக்கபட்டு வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் வரும் இரண்டு தமிழ் கிராமங்களை ஆக்கிரமித்து, பௌத்த பிக்குகளின் ஆதரவுடனும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்புடனும் வீடமைப்பு அதிகார சபையால், வீடுகள் அமைக்கப்பட்டு குறித்த குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது போன்று பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே செல்ல முடியும்.

காரணங்கள் தெளிவாகத் தெரிந்தாலும், அதற்கான எதிர்வினைகளின் போதாமை சீர் செய்வதே, இன்றைய காலத்துக்குப் பொருத்தமாகும்.

## கடிதங்கள்

திக்குவில் கிராமத்தில்

### மேட்டுப் பயிர் செய்கையை காப்பாற்றுங்கள்

கிளிநொச்சி, பூநகரி, திக்குவில் கிராம மக்கள், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக, மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், மக்கள் மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட நிலங்களை துப்புரவு செய்த வனவளத் திணைக்களம், தற்போது அந்நிலங்களில் மரக் கன்றுகளை நடுவதற்காக, திக்குவில் கிராமத்தில் பெருமளவு மரக் கன்றுகளை இறக்கியுள்ளது.

திக்குவில் குளம் கமநல சேவை நிலையத்தின் சியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட உள்ளது. இக்குளத்தில் இருந்து மேட்டுப் பயிர்ச் செய்கையை கூடுதலாக மேற்கொள்வதே கமநல சேவை நிலையத்தின் இலக்காக உள்ள போது, வனவளத் திணைக்களம் "மரக் கன்றுகள்தான் நடுவோம்; மேட்டுப் பயிர்ச் செய்கை வேண்டாம்" என்ற நிலையில் அடாத்தாகச் செயற்படுகிறது.

இதன் காரணமாக மேட்டுப் பயிர்ச் செய்கையை நம்பி தமது வாழ்வாதாரத்தினை நகர்த்துகின்ற குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வனவளத் திணைக்களத்தின் அடாத்தான செயற்பாடு தொடர்பாக, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்டச் செயலாளர், பூநகரி பிரதேச செயலாளர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே திக்குவில் கிராம மக்களின் கோரிக்கையாக உள்ளது.

-நடராசா கிருஸ்ணகுமார்

# “ஒவ்வொரு சித்திரத்திலும் தங்கியுள்ளது என் வாழ்க்கை”









ந. திஸ்னா குமாரி
(நான்காம் வருடம், ஊடக கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.)
navanadhanranjani@gmail.com


குறித்த ஒரு நபரை பற்றிய அறிமுகப்படுத்தலிலும், அவரை பற்றிய மதிப்பிடுதலிலும் அவருக்கே உரித்தான திறமைக்கு முக்கிய இடமுண்டு. ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ சில திறமைகள் புதைந்துத்தான் காணப்படுகின்றன. அவற்றை சரியான முறையில் இனங்கண்டு அத்துறையில் ஆர்வத்தையும் முயற்சியையும் விதைக்கும் பொழுது குறித்த துறையில் திறம்படவும் உயரவும் வாய்ப்புள்ளது.

அந்த வகையில் பதுளை ஹொப்டனூரில் விஜயரட்ணம் விக்ரம் என்றாலே, அவரால் வரையப்பட்ட ஓவியங்களும், களிமண் கொண்டு அவர் வடித்தெடுத்த சிற்பங்களுமே எல்லோருக்கும் நினைவில் வரும். அந்த அளவிற்கு தனக்கு உரித்தான கலைத்துறையில் தனிச் சிறப்பை கொண்டவர் தான் விஜயரட்ணம் விக்ரம்.

அன்றொரு நாள் விஜயரட்ணம் விக்ரம் தொடர்பாக கேள்வியுற்று அவரை காண்பதற்காக அவருடைய வீட்டிற்கு சென்றிருந்தேன். வீட்டிற்குள் நுழைந்ததும் வீட்டுச் சுவர்களில் அவரால் வரையப்பட்ட பல்வேறு வகைப்பட்ட ஓவியங்களை பார்த்து வியந்து போனேன். ஆங்காங்கே சிறிய சிறிய சிற்பங்களும் தனக்கே உரித்தான தனி அழகைக் கொண்டிருந்தன. இன்று தம் வீடுகளை அழகு படுத்திக்கொள்வதற்காகவே விலைமதிப்புள்ள எத்தனையோ அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இப்பொருட்களால் கூட தரமுடியாத இரசனையை விக்ரமால் கைப்பட வரையப்பட்ட ஓவியங்களும் சிற்பங்களும் எமக்கு தருவதாக அமைந்துள்ளன.

விஜயரட்ணம் விக்ரமிடம் பேசியதில் இருந்து பல்வேறு விடயங்களை அவரிடமிருந்து தெரிந்துக்கொள்ள கூடியதாக இருந்தது. “என்னால் வரையப்படும் ஒவ்வொரு ஓவியத்திலும் என்னால் செதுக்கப்படும் ஒவ்வொரு சிற்பத்திலும் மட்டுமே தங்கி வாழ்கின்றது எனது குடும்பம்” என பேச்சைத் தொடங்குகின்றார் விஜயரட்ணம் விக்ரம்.





### உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் விஜயரட்ணம் விக்ரம். வயது 21. அப்பா விஜயரட்ணம் . உடல் நலம் சற்று குறைவு காரணமாக தொழிலுக்கு செல்ல முடியாமல் தற்போது வீட்டில் இருக்கின்றார். அம்மா கமலாதேவி. கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு சுகயீனம் காரணமாக இறந்து விட்டார். எனக்கு ஒரு அக்கா, தம்பி, தங்கை மற்றும் அம்மம்மா என ஆறு பேர் கொண்டது எங்களது குடும்பம். தம்பி உயர்தர பரீட்சை எழுதிவிட்டு இருக்கிறார். தங்கை சாதாரண தரம் படித்துக்கொண்டு இருக்கிறாள். குடும்பத்தின் மூத்த ஆண் வாரிசு என்பதால் குடும்ப சுமை தற்போது என்மீது உள்ளது.

### உங்களுக்கு ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் ஆர்வம் எப்படி வந்தது?

என்னுடைய அப்பா நன்றாக சித்திரம் வரைவார். அவர் ஓய்வு நேரத்தில் எல்லாம் வரைவதை பார்த்து நானும் வரைவேன். நான் என்னுடைய வீட்டு சுவர்களிலே அதிகமாக வரைந்துள்ளேன்.வீட்டிற்கு வருபவர்கள் சித்திரங்களை பார்த்து விட்டு என்னை பாராட்டி செல்வார்கள்.

எனக்கு நன்றாக ஞாபகம் உள்ளது. நான் முன்பள்ளி படிக்கும் போது களிமண்ணால் ஒரு வாத்து செய்து வகுப்பறையில் வைத்திருந்தேன். அப்போது எனக்கு ஆசிரியராக இருந்த ஹொப்டனுரை சேர்ந்த திருமதி. சந்திரமதி ஆசிரியை எல்லா பெற்றோரிடமும் அந்த ஆக்கத்தை காட்டி பாராட்டினார். இந்த பாராட்டு எனக்கு உற்சாகத்தையும் தூண்டுதலையும் கொடுத்தது.

> என்னால் வரையப்படும் ஒவ்வொரு ஓவியங்த்திலும் என்னால் செதுக்கப்படும் ஒவ்வொரு சிற்பத்திலும் மட்டுமே தங்கி வாழ்கின்றது எனது குடும்பம்” எனக்கூறும் விஜயரட்ணம் விக்ரம் என்ற இளைஞனது திறமையும் உழைப்பும் பாராட்டப்படுவதுடன் அவருக்கான வாய்ப்புகள் பல வழங்கப்படுதலும் அவசியமாகும்

பின்னர் பது/கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 05 படித்துக்கொண்டிருக்கும் போது நான் நன்றாக வரைவதை பார்த்து அப்போது வகுப்பாசிரியையாக இருந்த திருமதி. ஸ்டெலா சிங்கள பாடசாலை ஒன்றில் நடத்த பட்ட சித்திர போட்டி ஒன்றிற்கு அழைத்துச்சொன்றார். அங்கு எனக்கு முதலாம் இடம் கிடைத்தது. நான் பெற்ற முதல் பரிசு அதுவே.

இதே பாடசாலையில் கலைவிழா ஒன்றிற்கு ரெஜிபோமில் இரண்டு பெண் உருவங்கள் வெட்டி எடுத்தேன். இதை பார்த்த பாடசாலையின் அப்போதைய அதிபர் ஸ்கந்தராஜா, உடனே அவருடைய பையிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து எனக்கு கொடுத்தார். இந்த தருணத்தை என்னால் மறக்கவே முடியாது. இதுவே எனக்கு மேலும் மேலும் பல சித்திரங்களை வரைய தூண்டியது.

பசறை தமிழ் மகா வித்தியாலயத்தில் உயர்தரம் கற்ற போது சித்திர பாட ஆசிரியர் டிலோஜன் ஓவியம் வரைவதில் உள்ள பல நுட்பங்களை மிக அழகாக சொல்லிக்கொடுத்தார். இவர்களது உந்துதலும் பாராட்டுமே இன்று இத்துறையில் மிளிர்வதற்கு காரணமாக அமைந்து எனலாம்.



### இதுவரை காலமும் இத்துறையில் நீங்கள் பெற்ற பாராட்டுகள் பரிசில்கள்?

பாடசாலை, மாகாண,தேசிய ரீதியிலும் பல பரிசில்களை பெற்றுள்ளேன். அந்த வகையில் 2015ஆம் ஆண்டு இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சித்திர போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்றமைக்கு இந்துசமய அறநெறி மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது பெற்றுக் கொண்டேன். 2016ஆம் ஆண்டு மாவட்ட ரீதியில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் இரண்டாம் இடமும், 2018 ஆம் ஆண்டு லுனுகலை பிரதேச செயலக பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திர போட்டியில் முதலாம் இடமும், ஊவா மாகாண இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற பிரதிபா இளைஞர் விருது வழங்குவதற்கான சித்திர போட்டியில் முதலாம் இடமும், 2018ஆம் ஆண்டு சிங்களம் மற்றும் தமிழ் ஊவா மாகாண அரச சாகித்திய விழாவில் பாடசாலை பிரிவில் ( தமிழ் மொழி மூலம்) சித்திரப்போட்டியில் ‘மகாபாரதத்தில் ஒரு காட்சி’ என்ற ஆக்கத்திற்கான விருதினையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டேன்.

அத்தோடு ஒக்ஸ்போர்ட் கலைவிழா 2013ஆம் ஆண்டு சமூக அபிவிருத்திக்கான சுகாதாரம் மற்றும் தகவல் தொழினுட்பம் அமைப்பினால் நடத்திய சித்திரப்போட்டியிலும், வேல்ட்விஷன் லுனுகலை பிரதேசத்தில் 2014ஆம் ஆண்டு நடாத்திய சித்திர போட்டியிலும், 2019ஆம் ஆண்டு இலங்கை விமானப்படை மற்றும் கல்வி அமைச்சு இணைந்து நடத்திய சித்திரப்போட்டியிலும் பங்கு பற்றி பரிசில்களை பெற்றுள்ளேன்.

### தற்காலத்தில் உங்களுக்கும் இத்துறைக்குமான தொடர்பு எவ்வகையில் உள்ளது?

இன்று சித்திரங்கள் வரைதல், சிற்பங்கள் செதுக்குதல் மூலமாக எனக்கு கிடைக்கும் சிறு வருமானத்தில் இன்று எனது குடும்பம் வாழ்ந்து வருகிறது. பிறந்தநாள், திருமண நிகழ்வுகளுக்கு பரிசிலாக வழங்கக்கூடிய வகையில் புகைப்படங்களை வரைந்து கொடுக்கின்றேன். அத்தோடு கோயில், பாடசாலை மற்றும் வீட்டு சுவர்களிலும் வரைகின்றேன். இதன் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

அந்த வகையில் ஹொப்டன் கலைமகள் பாடசாலை, பசறை தமிழ் மகா வித்தியாலயம், கேல்வத்தை தமிழ் வித்தியாலயம், பசறை பானபாஸ் முன்பள்ளி (Baranbass) போன்ற பாடசாலைகளில் வரைந்திருக்கின்றேன். சுவர்களை அழகுபடுத்தும் விதமாக வீடுகள், கோயில்களிலும் நிறைய வரைந்திருக்கிறேன்.

### ஒரு ஓவிய, சிற்ப கலைஞனாக நீங்கள் எதிர்ப்பார்ப்பது என்ன?

இன்றைய காலத்தில் எனது வருமானம் குறைந்து விட்டது. காரணம் நிறைய மக்களுக்கு என்னுடைய திறமை பற்றியோ என்னை பற்றியோ தெரியவில்லை. இந்த கட்டுரையை பார்த்த பிறகாவது எனக்கான வேலைவாய்ப்பு கிடைக்கும் என நம்புகின்றேன்.

கடவுளால் எனக்கு அருளப்பட்ட கலைத்திறனைக்கொண்டு தனிஒருவராக தனது குடும்பத்தை வழிநடத்தி வரும் விஜயரட்ணம் விக்ரம் என்ற இளைஞனது திறமையும் உழைப்பும் பாராட்டப்படுவதுடன் அவருக்கான வாய்ப்புகள் பல வழங்கப்படுதலும் அவசியமாகும்.

# சிற்பத்தில் காலநிலையும் தாக்கம் செலுத்தும்







இரா. யோகேசன்
ogesan12press@gmail.com


மலையகத்தில், சிற்பத்துறையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வரும் ஹட்டன் ஸ்டதன் தோட்டத்தை சேர்ந்த ஜெயமோகன் சிவலால் ரவிமோகன், சிற்பத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு அத்துறையில், மனமகிழ்ச்சி ஏற்படுவதோடு, ஒழுங்கம் நிறைந்த வாழ்க்கை முறையும் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றார். அந்தவகையில் இவ்வார பகுதிக்கு அவர் வழங்கிய விசேட செவ்வி கீழே தரப்படுகின்றது.

கேள்வி: சிற்பத்துறையில் ஆர்வம் ஏற்பட்டதற்கான காரணங்கள் யாவை?

பதில்: பாடசாலை காலங்களில் ஆக்கம், சித்திரம் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. பிற்பட்ட காலங்களில், எனது தந்தை இத்தொழிலையே முதன்மையாகக் கொண்டிருந்தார். குறிப்பாக, அவர் வேலை செய்யும் இடங்களுக்குச் சென்று, நானும் எனது ஆரம்ப கட்ட பணிகளை முன்னெடுத்திருந்தேன்.

தவிரவும், எனது பரம்பரை கூட, இந்தச் சிற்பத் துறையில் ஈடுபட்ட ஒரு பரம்பரையாக இருந்து வந்துள்ளது. இதுவும் ஒரு காரணம், நான் இத்துறைக்குள் வரவதற்காகும். தவிரவும், எனது தந்தை இவ்வாறு சிற்ப வேலைகள் மேற்கொண்டிருந்த போது, அவருக்கு உதவி செய்தல், அதை அவதானித்தல், செய்து பார்த்தல், ஆர்வம் என்பன, எனக்குள்ளும் சிற்பத்துறை வளர்வதற்குக் காரணமாக இருந்தன.











கேள்வி: சிற்ப கலையை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?


கேள்வி: நாம் வணங்கும் கடவுளை உருவாக்கும் ஒரு மனநிலையை, என்னில் உருவாகின்றது. நான் ஒரு கலைதுறையில் ஈடுபடுகின்றேன் என்ற எண்ண நிலை தோன்றுகின்றது. மேலும், இத்துறையில் ஈடுபடுபவர்கள் ஒழுக்கத்துடனும் மிக கண்ணியத்துடன் இருப்பதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துகின்றது.

கேள்வி: சிற்பக் கலையை இலங்கையில் எந்தெந்த பிரதேசத்தில் மேற்கொண்டீர்கள்; அங்கு கிடைத்த அனுபவம் என்ன?

பதில்: ஹட்டன், ஸ்ஸலாவ, களுத்துறை, மதுகம, மஸ்கெலியா, நாவலபிட்டி, கண்டி, கம்பளை, தலவாக்கலை, நோர்வூட், ரம்பொட, வத்தளை, கொழும்பு போன்ற இடங்களிலும் குறிப்பாக, மலையக தோட்ட பகுதிகளிலும் சிற்பத்துறை சார்ந்த பலவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக, வெப்பம் அதிகமுள்ள பிரதேுசங்களில் வேலை செய்திருக்கின்றேன். அப்பிரதேசங்களில் நேரத்தை கருத்திற்கொண்டுதான் வேலை செய்யவேண்டி வரும். அவ்வாறு அதிக வெப்ப பிரதேசங்களில் குறிப்பாக மத்துகம, களுத்துறை போன்ற பிரதேசங்களில் வேலை செய்யும் போது, சீமெந்தினை பூசும் போது, குறுகிய நேரத்தில் காய்ந்து விடும். குறிப்பாக, சிற்ப வேலைகளின் போது, ஒரு குறிப்பிட்ட ஒரு நாளில் நிறைவு செய்ய வேண்டும். குறிப்பாக, முக வடிவமைப்பு; அன்றைய தினத்திலே நிறைவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு நாள்கள் அடுத்த தினத்திற்கு செல்லும் போது, பூசப்படும் சீமெந்தால் பாரிய அசௌகரியங்களை சந்திக்க வேண்டி வரும். இது மலையக பிரதேசத்துக்கும் ஏனைய வெப்ப பிரதேசத்துக்குள்ள வேறுபாடாகும்.

குறிப்பாக மலையக பிரதேசத்தில் சீமெந்து பூசப்படும் போது, அடுத்த நாளிலும் கூட வேலை செய்ய முடியும். ஆனால் வெப்ப பிரதேசங்களில் அவ்வாறு இல்லை. சில சந்தர்ப்பங்களில் வெடிப்பு கூட ஏற்பட்டு விடும். இது எமது வேலையை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஒரு சவாலை ஏற்படுத்தி விடும். மேலும், மலையகப் பிரதேசத்தில் நாம் வாழும் பிரதேசமாவதால், சூழலுக்கு ஏற்றவகையில் பணியை நிறைவு செய்ய முடியும். தவிரவும் ஏனைய வெப்ப பிரதேசத்தில் சென்று மேற்கொள்ளும் போது, முதலில் சூழலுடன் இயைபாக்கம் அடைய வேண்டிய ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே சிறபத்துறையில் காலநிலையும் செல்வாக்கு செலுத்திகின்றது என்பதை மேற்படி விடயங்களிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.



## முதிர்வுக்கு முன்

# அழிக்கப்படும் பயிர்கள்

### களுதாவளை விவசாயிகளின் நிலைமை

வ. சக்திவேல்
shagthivel@gmail.com

“உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே” என்ற பாடல் வரிகளுக்குக் கட்டியங் கூறுவதுபோல், பலரும் தமக்குத் தெரிந்த ஏதோ ஒரு தொழில் முயற்சிகளை மேற்கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தத்தமது குடும்பங்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

எது எவ்வாறு அமைந்தாலும், பெரிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களைத் தவிர, கிராமங்களில் சிறிய சிறிய, தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள், வருடாந்தம் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும் சவால்களுக்கும், முகம் கொடுத்து வருவதாக அங்கலாய்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம் வேளாண்மைச் செய்கையைப் போலவே, மேட்டுநில விவசாயச் செய்கைக்குப் பெயர்போன பிரதேசமாகக் காணப்படுவது, மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட களுதாவளைக் கிராமமாகும்

தமது பாட்டன், பூட்டன் காலத்திலிருந்து பரம்பரை, பரம்பரையாக மேற்கொண்டு வந்த தொழிலாக கத்தரி, மிளகாய், வெற்றிலை, வெங்காயம், பீர்க்கு, பாகல், பயற்றை உள்ளிட்ட பலவகையான மேட்டுநிலப் பயிற்செய்கை, வருடத்தின் 12 மாதங்களும் செய்கைபண்ணப்படுகின்றன.

ஓய்வின்றி, கடற்கரை மணலில் கடும் வெயிலுக்கும் பலத்த மழைக்கும், தாக்குப் பிடித்து, உழைத்துச் சம்பாதித்து, தமது குடும்பத்தைப் பாதுகாத்து வரும் விவசாயிகள், தற்போது பல சவால்களுக்கு மத்தியில், தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

“இதுவரை காலமும் நாம் உற்பத்தி செய்யும் அனைத்து விளை பொருட்களுக்கும் உரிய விலையை, நாங்களே தீர்மானிக்க முடியாதவர்களாக, எமது உற்பத்திகளை எம்மிடமிருந்து கொள்வனவு செய்யும் மொத்த வியாபாரிகள்தான் விலையைத் தீர்மானித்து கொள்வதுவும், அதற்கு ஏதோ ஒரு விதத்தில் இணங்கி, தமது விளை பொருட்களை அவர்களுக்கு, விற்பனை செய்ய வேண்டிய நிற்பந்தங்களுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டுதான், எமது வாழ்வாதாரமும் வாழ்வும் உருண்டோடிக் கொண்டிருந்தது. இந்நிலையில், இவ்வருடம் கடந்த வருடங்களைப் போலல்லாமல், மிளகாய், கத்தரி, வெண்டி உள்ளிட்ட பயிர்களை, உகந்த உரமில்லாமல் இடை நடுவில் பிடுங்கி அழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்” என களுதாவளைப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

“எமது கிராமத்தில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டு, தற்போது மூன்று வருடங்களுக்கு மேலாகக் கழிந்துள்ள நிலையில், நாம் உற்பத்தி செய்யும், மிளகாய், பயற்றை, கத்தரி, வெண்டி, உள்ளிட்ட பல விளைபொருட்களை, எம்மிடமிருந்து மொத்த



வியாபாரிகள் கொள்வனவு செய்யும்போது, அவர்கள் மிக மிகக் குறைந்த விலைக்கே பெற்றுக் கொள்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் பெற்றுக் கொள்ளும் பொருட்களை, அதிக விலைக்கு சந்தையில் விற்பனை செய்கின்றார்கள். உதாரணமாக, மிளகாய் ஒரு கிலோ எம்மிடமிருந்து 100 ரூபாய்க்கு கொள்வனவு செய்தால், அவர்கள் அதை 200 ரூபாய்க்கு விற்கின்றார்கள். வெயில் மழை, பனி எனப் பாராது, அல்லும் பகலும் வியர்வை சிந்தி, இவ்வருடம் கிருமிநாசினி, களைநாசினி, உரவகைகள், உள்ளிட்ட அனைத்தையும் இல்லாமல், பல பிரயத்தனங்கள் செய்து உற்பத்தி செய்யும் எமக்கு 100 ரூபாயும், அதனைக் கொண்டு விற்பனை செய்பவர்களுக்கு 100 ரூபாயுமாகத்தான் உள்ளது.

உர வகைகளாவது இருந்திருந்தால் நாம், இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரியில் நடுகை செய்த பயிர்களை, டிசெம்பர் மாதம் வரைக்குமாவது வைத்திருந்து, அதிலிருந்து உச்சப் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். ஆனால், நாம் எமது நிலைமைகளை யாரிடம் போய்ச் சொல்வது எனத் தெரியாமல், அவற்றை இடைநடுவில் பிடுங்கி அழித்து வருகின்றோம்” என விவசாயிகள் அங்கலாய்கின்றனர்.

பயிர்களுக்குத் தேவையான போசனைப் பொருட்கள் இன்றி, அதிக உற்பத்திச் செலவை மேற்கொண்டு, குறைந்த விலைக்கு விற்பதைவிட, அந்தத் தொழிலை மேற்கொள்ளாமல் இருப்பது நல்லது எனச் சிந்திக்கின்றோம். தற்போது நாம் நட்டுள்ள பயிர்கள், இவ்வருட இறுதிவரைக்கும் காய் கறிகளைப் பறிக்கலாம். இந்நிலையிலும்கூட, அதனால் வருமானம் வருவதை விட, செலவுதான் அதிகம் என்பதை உணர்ந்து, அப்பயிர்களை இடைநடுவிலே பிடுங்கி அழிக்கின்றோம். முதற்கட்டமாக அரைவாசி செயற்கை உரத்தையும் அரைவாசி இயற்கை உரத்தையும் சேர்த்துப் பாவனை செய்தாலும், ஓரளவுக்கு நாம் எமது பரம்பரை வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியும். எதிர்காலத்தில் நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பது எமக்குத் தெரியாமலுள்ளது. உரமுமில்லை உழவுமில்லை என்ற நிலைமைக்கத் தள்ளப்பட்டுள்ளோம்” எனத் தெரிவிக்கின்றார்கள்.

“இது இவ்வாறு இருக்கின்ற நிலையில், கொவிட் -19 தாக்கத்தால், விளை பொருட்களை தகுந்த விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் போனது. இதற்கு அரசாங்கம் நட்ட ஈட்டைப் பெற்றுத்தர வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். வேளாண்மை செய்யும் விவசாயிகளின் நெற்பயிர்கள் வரட்சியினாலோ, வெள்ளத்தாலோ பாதிப்புறும்போது, அரசாகங்கம் அவர்களுக்கு மானியங்கள் வழங்கி வருகின்றது. அதற்குரிய பொறிமுறையும் அரசாங்கத்திடம் உள்ளது. மாறாக, நாம் உற்பத்தி செய்யும் மரக்கறி வகைகள், பழ வகைகள் பாதிப்புறும்போது, அரசாங்கம் இதுவரையில் எமக்கு உரவகைகளையோ, நட்ட ஈடுகளைத் பெற்றுத்தரவில்லை. நாங்களும் விவசாயம்தான் மேற்கொள்கின்றோம். எம்மை அரசாங்கம் ஏன் வேறாகப் பிரித்துப் பார்க்கின்றது என தெரியாதுள்ளது” என களுதாவளைப் பகுதி விவசாயிகள் கருதுகின்றனர்.

எனவே விவசாயத்திலும். மீன்பிடியிலும், பெயர்போன மாவட்டமாகத் திகழும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தேவைகளைக் கண்டறிந்து, அவ்வப்போது பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியது, சம்மந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினதும், அரச அதிகாரிகளினதும் தலையாய கடமையாகும்.

ஆங்காங்கே அவ்வப்போது சிற்சில அபிவிருத்திகள் நடந்தேறி வந்தாலும், இதுவரையில் பூர்த்தி செய்யப்படாத பல்வேறுபட்ட பிரச்சினைகள் இன்னும் தொடர் கதைகளாகவே உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வேளாண்மைச் செய்கைக்கு சிறுபோகம், பெரும்போகம் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் மானியங்கள், பாதிப்புகள் ஏற்படும்போது வழங்கப்படும் இழப்பீடுகள் ஆகியவற்றை மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

களுதாவளையில் மாத்திரம் 450 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் 1,000 இற்கு மேற்பட்ட விவசாயிகள் மிளகாய், செய்கையில் ஈடுபடுகின்றனர். இதுவரைகாலமும் செயற்கை உரங்களைப் பாவித்து வந்த விவசாயிகள் மத்தியில், அதைத் திடீரென நிறுத்தி விட்டமையால், அப்பயிர்களிலிருந்து உச்சப் பயன்களைக் பெறுவதற்கிடையில் அதன் முதிர்ச்சிக்காலம் வரும் முன்னர் அதனை இடை நடுவிலே பிடுங்கி அழிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

களுதாவளையில் 300 மில்லியன் ரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தைத் திறந்து, மக்கள் பாவனைக்கு விடப்படல் வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பாதிப்படையாவண்ணம், உரிய நியாய விலையை தீர்மானிக்கும் ஒரு பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும். பயிர்களுக்கு வரும் இடர்களுக்குத் தகுந்த தீர்வுகளை வழங்க உரிய தரப்பினரால் நெறிமுறை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் பச்சத்தில் களுதாவளைப் பிரதேச மரக்கறிச் செய்கையாளர்கள், இடைநடுவில் தமது உற்பத்திகளைக் கைவிட்டு விட்டு, பிடுங்கி அழிக்கும் நிலைக்குத் தள்ளப்படமாட்டார்கள். அவ்வாறெனில்தான் அவர்களின் வாழ்விலும் ஒளி வீசும் என்பதுவே விவசாயிகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது.




# ‘யானைப் பசிக்கு சோளப் பொரி’

### கிளிநொச்சி மாவட்டத்தில் கிடைக்கும் சேதனப் பசளை, உரிய போசனை மட்டங்களைக் கொண்டுள்ளதா?

சுப்ரமணியம் பாஸ்கரன்

ஆதிகாலத்தில், விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதன், நாகரிக வளர்ச்சிப் போக்கில் தன் வாழ்க்கையை மாற்றிக் கொண்டான், இன்றைய நவீன உலகில், தேவைகள் அதிகரிப்பு, ஆடம்பர வாழ்க்கை என வருமானத்தை மேம்படுத்த என்று, கடிகார முட்களைவிட ஓய்வின்றி ஓடும் நிலையில், மனிதன் ஓடிக் கொண்டிருக்கின்றான்.

ஆரம்ப காலத்தில், மனிதன் காடுகளை வெட்டி, சேனைப் பயிர் செய்கை, இயற்கை உரப் பாவனை என்பவற்றின் மூலம், தன்னிறைவான வாழ்க்கையுடன் நோயற்ற சமூகமாக, நூறு ஆண்டுகள் கடந்தும் வாழ்ந்திருக்கின்றான். இதை உறுதிப்படுத்தும் வகையில், எமது மூதாதையர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

ஆனால், இன்று நவீன வளர்ச்சிப் போக்கும், இரசாயனங்களின் பயன்பாடுகளும் பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாக்க, மனிதனின் ஆயுட்காலத்தை மிக வேகமாக குறைத்துள்ளது.

இன்று, இரசாயன பசளைப் பயன்பாட்டை நிறுத்தி, சேதனப் பசளை மூலம் உணவு உற்பத்தியை மேற்கொள்வதற்கான அரசின் அறிவிப்பை அடுத்து, பல்வேறு போராட்டங்கள், எதிர்ப்புகள் என நீண்டு செல்கின்றன.

தற்போது, பெரும் போகச் செய்கைக்குத் தேவையான உரத்தைப் பெற்றுத் தருமாறு கோரி, வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்கள் முன்பாக, கடந்த வாரம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன

சேதனப் பசளை பயன்பாட்டின் மூலம், கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்தை மேற்கொண்டு வெற்றி கொள்ள முடியுமா என்ற கேள்விக்கு, யாருமே பதில் கூற முடியாதவர்களாக இருக்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இரணைமடு குளம் உள்ளிட்ட பாரிய நீர்ப்பாசன குளங்கள், சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்கள் என ஏறத்தாள 71 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில், இவ்வாண்டு நெற்செய்கை மேற்கொள்ளபடவுள்ளது.

இதற்கான பணிகளில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். 60 விதமான பயிர் செய்கை நிலங்கள், பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தபட்டுள்ளன. இந்தநிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் சேதனப் பசளையை உற்பத்தி செய்யவோ, பெற்றுக்கொள்ளவோ வசதிகள் இல்லை. சேதனப் பசளையை மட்டும் பயன்படுத்தி, இந்தப் போக பயிர்செய்கையில் 100 சதவீத வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

அதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தியும் கழிவுகளைச் சேகரித்தும், சேதன உரத்தை உற்பத்தி செய்து, மாவட்டத்திலுள்ள 25 சதவீதமான மேட்டு நில பயிர்களுக்கு மாத்திரமே, இது பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.



இரசாயன உரப் பயன்பாடுகள் திடீரென நிறுத்தப்பட்டதால், விவசாயிகள் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்ட நிலையில், தற்போது சேதன உரங்களை உற்பத்தி செய்ய முடியாத நிலையில், தனியார் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்ற சேதன உரத்தைப் பெற்று, பயிர்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அது, தரமான சேதன உரமா, அதில் அடங்கியுள்ள மூலக்கூறுகள் என்ன என்பது பற்றிய, எந்த விதமான தெளிவற்ற நிலையில், பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சேதன உரத்தை, விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, அக்கராயன், கோணாவில் போன்ற பிரதேசங்களில், இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட மேட்டு நிலச் செய்கைகளுக்கு, இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட உரங்களைப் பயன்படுத்தியதால், சில இடங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

இதைவிட, தற்போது நெற்செய்கை நிலங்களில் பயன்படுத்தப்பட்ட சேதனப் பசளைகளால், புதியவகை களைகள் உருவாகி இருக்கின்றன. குறிப்பாக, சேதனப் பசளை என, மாட்டெரு, உமி சாம்பல், மண் என்பவற்றையே பொதி செய்து, விற்பனை செய்யப்படுகின்றது.

இதனுடைய தரம், இதில் அடங்கியுள்ள மூலக்கூறுகள் என்ன என்பது தொடர்பில், எந்தவிதமான தெளிவும் விவசாயிகளுக்கு இல்லாத நிலையில், பயிருக்குத் தேவையான சத்துப் பொருட்கள் இதில் அடங்கியிருக்கின்றதா, மண் வளத்துக்கு ஆபத்தை ஏற்படுத்துமா என்பது பற்றியெல்லாம், ஆய்வுக்கு உட்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில், அண்மையில் கமநல சேவை நிலையங்கள் ஊடாக, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட சேதன உரம், தரமற்றது எனக் கண்டறியப்பட்டு, அவை திருப்பி அனுப்பப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிலைமை இவ்வாறு இருக்கையில், மாவட்டத்தில் உற்பத்தியோ, அல்லது விற்பனையோ செய்யப்படுகின்ற உரம், உரிய போசனை மட்டங்களை கொண்டிருக்கிறதா என்பது பற்றிக் கூறுவதற்கு, மாவட்டத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, கடந்த 10 ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய கல்லூரி, விதை உற்பத்தி பண்ணை, விவசாய ஆராய்ச்சி திணைக்களம் எனப் பல்வேறு திணைக்களங்கள் இங்கே இயங்குகின்றன.

சேதனப் பசளையைப் பயன்படுத்தி, மேட்டு நிலப்பயிர்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நெற்செய்கை மேற்கொண்டதாக இல்லை. சேதன பசளை பயன்பாடு தொடர்பாக, மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூட, இவ்வாறு மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்விக்கு, எந்த திணைக்களங்களும் பதில் அளிக்கவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில், எவ்வளவு சேதன உரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கூட, இல்லாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சேதனப் பசளை தேவை என்றும் இதில், 73 ஆயிரம் மெற்றிக் தொன் பசளை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டதாக, மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில், இவ்வாறான ஒரு தகவலை, எந்த திணைக்களங்களும் தெரிவித்ததாக இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்கள் ஊடாக, விவசாயிகளுக்கு வழங்குவதற்கென, ஏற்கெனவே கையிருப்பில் இருந்த இரசாயன உரத்தை, மாவட்டத்தில் சேதன உரத்தை பயன்படுத்தி பயிற்சிகளை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு அறிவுறுத்தி, முன்மாதிரியாகத் திகழ வேண்டிய திணைக்களங்கள், கையிருப்பில் இருந்த உரங்களை ஏற்றிச் செல்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில், இப்போது இருக்கின்ற மொத்த சனத்தொகையின் அடிப்படையில், உணவுத் தேவைக்கு வருடமொன்றுக்கு 22,800 மெற்றிக் தொன் நெல் தேவைப்படுகின்ற நிலையில், சேதனப் பசளையைப் பயன்படுத்தி, குறித்த தேவை மட்டத்தை அடையமுடியுமா என்பது கேள்விக் குறியாகும்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 23 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.